வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 14.11.2022 திங்கட்கிழமை இதழ் : 341 பக்கங்கள் : 16




# கட்சிவேறுபாடுகளை புறமொதுக்கி சம்பந்தன் இல்லத்துக்கு வாருங்கள்!

## சகல தமிழ் கட்சிகளுக்கும் சுமந்திரன் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

எமது மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக கட்சி வேறுபாடுகளை புறம் வைத்து அனைவரையும் உரையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சம்பந்தனின் கொழும்பிலுள்ள இல்லத்தில் ஒன்றுகூடுமாறு வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

15



# ஈ. பி. டி. பி. கட்சி பணிமனைக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், நவ. 14

மின்கட்டணம் செலுத்தப்படாதமையால் ஈ. பி. டி. பி. கட்சியின் தலைமை பணிமனையாக இயங்கும் சிறீதர் தியேட்டருக்கான மின் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளது என்று அறிய வருகிறது.

2014ஆம் ஆண்டுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்துக்கான கட்டணம் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்த நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது விடயத்தில், அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது.

1990களில் இருந்து 1995ஆம் ஆண்டு வரை

15



# அமிர்தலிங்கத்தின் மகன் காலமானார்

லண்டன், நவ. 14

நாட்டின் முதலாவது எதிர்க்கட்சி தலைவரான தமிழரான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மூத்த புதல்வரான அமிர்தலிங்கம் காண்டீபன் தனது 66ஆவது

15

# வரவு - செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றில்!

கொழும்பு, நவம்பர் 14

**2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை இன்று திங்கட்கிழமை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.**

இதற்காக இன்று மதியம் 1.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் நேற்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில், "நீண்ட கால, நிலையான பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டதாக இருக்கும். இந்த வரவு - செலவுத் திட்டம் மூலதன சந்தை, ஏற்றுமதி சந்தை, தொழிலாளர் சந்தை மற்றும் டிஜிற்றல் பொருளாதாரம்

15

# தமிழர் பிரச்னைத் தீர்வு பேச்சு கிழக்கையும் உள்வாங்குங்கள்!

## ஜனாதிபதியை தனித்து சந்தித்து கோர ரெலோ முடிவு!

கொழும்பு, நவ. 14

தமிழ் மக்களின் பிரச்னை தீர்வுக்காக வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அடுத்தவாரம் ஜனாதிபதி சந்தித்துப் பேசவுள்ளார். இந்நிலையில், நிலையில், வடக்கு உறுப்பினர்களுடனான பேச்சுகளின்போது கிழக்கு உறுப்பினர்களையும் உள்ளீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனித்து சந்தித்துக் கோருவதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சுகளை

15


# ஜனாதிபதியின் செயல்கள் நம்பிக்கை தந்தாலே ஆதரவு

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

"நாங்கள் பேசப் போகின்றோம் செய்யப் போகின்றோம் என்று சொல்லிக்கொண்டிருக்காமல் பேசி செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும். அதுதான் முக்கியம். ஜனாதிபதி ரணிலின் செயல்பாடுகள் நம்பிக்கைக்குரியதாக இருந்தால் எங்கள் முழுமையான ஆதரவு கிடைக்கும்." - இப்படி கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்

15



# ஐஸ் போதை வைத்திருந்தால் ஆயுள் அல்லது மரண தண்டனை

கொழும்பு, நவ. 14

சமூகப் பேரிடராக மாறியுள்ள ஐஸ் போதைப் பொருள் 5 கிராம் அல்லது அதற்கு மேல் வைத்திருக்கும் ஒருவருக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இளைஞர்களின் வாழ்வை சீரழிக்கும் போதைப் பொருளிலிருந்து அவர்களை மீட்பதற்கு சட்ட நடவடிக்கைகளை

15

# திருமலையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்!

## இந்தியா - இலங்கை பேச்சு

கொழும்பு, நவ. 14

திருகோணமலை துறைமுகத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - லங்கா

15

# மக்களின் உரிமையை பாதுகாக்க அரசு தேர்தலை நடத்த வேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, நவ. 14

உள்ளூராட்சி மன்ற தேர்தலை உரிய நேரத்தில் நடத்தி மக்களின் உரிமையை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் சுதந்திரத்துக்கு முன்னோடியாக அரசியல் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார அபி

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

புதிய அரசியலமைப்பு விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலமாக அடிக்கடி பிரஸ்தாபித்து வருகின்றார். இது குறித்து அவர் அண்மையில் தன்னைச் சந்திதத் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களுடன் கருத்து தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு சட்டத்தைக் கொண்டுவருவேன் என்று தெரிவித்திருந்தது குறித்து இந்தப் பத்தியிலும் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த சந்திப்பு குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி தமக்கு வழங்கிய உறுதிமொழிபற்றி பிரஸ்தாபித்திருந்தனர். அதன் பின்னரே பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்துகளின் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், யாழ் மாவட்ட எம். பி., சுமந்திரனும் அதனை வரவேற்றிருந்ததுடன், தமது முழுஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் உறுதியளித்திருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்தபோது பாராளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றி புதிய அரசியலமைப்பை தயாரிக்க ஐந்து ஆண்டுகள் முயன்று கடைசியில் தயாரிக்கப்பட்ட வரைவுக்கு என்ன நடந்தது? ஏன் அதிலிருந்து தொடங்குமாறு கூட்டமைப்பினர் கேட்கவில்லை என்றும் இந்தப் பத்தியில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தது, எதற்காக என்பது குறித்து இந்த ஊர்க்குருவி சில விடயங்களை பகிரங்கமாக எழுதாவிட்டாலும், இப்போது அந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டதால் அதுகுறித்து கேள்வி எழுப்பாமல் இருக்கமுடியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க தன்னைச் சந்தித்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களிடம் கோட்டாபய நியமித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாகவே தெரிவித்திருந்தார்.

அந்தக் குழு நீண்டகாலமாக இதுகுறித்து ஆராய்ந்ததுடன், அநேகமாக அனைத்துக் கட்சிகளிடம் இருந்தும் ஆலோசனைகளையும் பெற்றே தமது இறுதி அறிக்கையை தயாரித்திருந்தது. அந்த அறிக்கை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயவிடம் கையளிக்கப்பட்டிருந்தபோதிலும் அது பகிரங்கப்படுத்தப்படவில்லை.

அதற்கு அப்போது இருந்த நிலைமைகளும் காரணமாக இருக்கலாம். பொருளாதார நெருக்கடியால் நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவது பொருத்தமானதாக இருக்காது என்று அவர் கருதியிருக்கலாம்.

ஆனால், நேற்றைய தினம் 'ஈழநாடு'வில் பனங்காட்டான் அந்த அறிக்கையில் இருந்து கசிந்த விடயங்கள் சிலவற்றை கோடிட்டுக் காட்டியிருந்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை நீக்க வேண்டும் - அதாவது இந்த முறைமைக்கு மக்கள் ஆதரவில்லையென்று குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்று இந்த அறிக்கை சுட்டியுள்ளது. அனைத்து மக்களும் சமத்துவமாக இருப்பதற்கு மாகாண சபை முறைமை குந்தகமாக உள்ளது என்ற கருத்து இங்கே வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவில் இடம்பெற்ற ஒரேயொரு தமிழரான சட்டப் பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் மட்டுமே மாகாண சபை தக்க வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதுவே பனங்காட்டான் வெளிக்கொண்டுவந்த அந்த அறிக்கையின் முக்கியமான விடயம். பனங்காட்டான் இந்த மாகாண சபைகளோ அல்லது பதின்மூன்றாவது திருத்தமோ தமிழர்களின் பிரச்னைகளுக்கு எந்த வகையிலும் தீர்வாகாது என்ற கருத்தைக் கொண்டவர். ஆனாலும், அவர்கூட அந்த புதிய வரைவில் அதுகூட இல்லாமல்தான் இருக்கப்போகின்றது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே அதனைக் குறிப்பிட்டிருப்பார் என்று நினைக்கின்றேன்.

நேற்று முன்தினம் இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியது போன்று, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் உருவாக்கப்பட்ட சமஷ்டிக்கான பெயர் இல்லாவிட்டாலும் சமஷ்டி கட்டமைப்பைக் கொண்ட அந்த வரைவை இறுதிசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அதன் தயாரிப்பில் ஈடுபட்டவர்களான நமது கூட்டமைப்பினர் வலியுறுத்தவேண்டும்.

அல்லது ஜனாதிபதி சட்டத்தரணியான மனோகர டி சில்வா தலைமையிலான அந்தக்குழுவின் அறிக்கையை முதலில் பகிரங்கமாக வெளியிடுமாறு வலியுறுத்தி, அதன் யோசனைகளை அறிந்து எதிலிருந்து தொடங்குவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதைவிடுத்து, ஜனாதிபதியின் புதிய அரசமைப்பு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குகின்றோம் என்று அறிவித்துவிட்டு. காலம்கடத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவது எந்த வகையிலும தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

இவற்றைச் செய்யாதவிடத்து, கடைசியாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்னையை வடக்கின் பிரச்னையாக மாற்றியது போல, அல்லது அவர் குறிப்பிட்ட அந்த கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அபிவிருத்தி செயல்பாடுகளுடன் தமிழ் பிரச்னைக்கு 'தீர்வு' காணப்பட்டுவிடும்.!

**- ஊர்க்குருவி**

# இது போன்ற உச்ச சந்தர்ப்பம் இனி தமிழர்களுக்கு கிட்டாது!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, நவ. 14

கடந்தகால கசப்பான விடயங்களிலிருந்து மீள்வதற்கு தமிழர்களுக்கு மீண்டும் ஓர் அதியுச்ச அளவிலான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதென ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் பிரச்னை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தவுள்ளதாக கூறியமை தொடர்பிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் இப்படி தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதில் மிகமுக்கமானது இந்திய - இலங்கை ஒப்பந்தமாகும். துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தலைவர்களும் விடுதலைப் புலிகளும் அதனை எதிர்த்தார்கள். அதன்விளைவால் தமிழ் சமூகம் முப்பது ஆண்டுகள் பின்னடைவைச் சந்திக்குமளவுக்கு நிலைமைகள் மோசமடைந்து விட்டன.

இவ்வாறான நிலையில், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை தற்போதுள்ள தமிழ்த் தலைவர்களாவது சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது. சமகால நிலைமைகளின் பிரகாரம், தென்னிலங்கையில் உள்ள தலைவர்களில் விடயங்களை நடைமுறைச் சத்தியமாக்க கூடிய அளவுக்கும் றைந்தபட்ச நியாயத்துடனும் அணுகுமுறைகளை செய்யவல்ல ஒரேதலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார்.

இதன் காரணத்தாலேயே, பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின் போது ஈ. பி. டி. பி. தாமாக முன்வந்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது.

தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவை உபகுழுவொன்றை ஜனாதிபதி அமைத்துள்ளார். தற்போது ஏற்பட்டுள்ள சூழல் தமிழர்களுக்கு மிகச்சாதகமானதாக உள்ளதென்பதே எமது நிலைப்பாடாகும். இவ்வாறானதொரு சூழல் எதிர்காலத்தில் ஏற்படுமா என்பதையும் கணிக்க முடியாது.



ஆகவே, இந்தச் சூழலே அதியுச்ச சந்தர்ப்பமாக தமிழ் மக்கள் கொள்ள வேண்டும். குறிப்பாக எதிர்ப்பு அரசியலைச் செய்து வருகின்ற தமிழ்த் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதனடிப்படையில் அவர்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# நாட்டின் அதிக மின் கட்டணம் மாதாந்தம் 7 கோடி ரூபாயாம்!

கொழும்பு, நவ. 14

இலங்கைத் துறைமுக அதிகார சபை மற்றும் கொழும்பு துறைமுகத்தில் இலங்கையின் மிகப்பெரிய மின்சாரக் கட்டணம் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபைத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கை துறைமுக அதிகாரசபை என்ற பெயரில் நான்கு கணக்குகளின் கீழ் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், மாதாந்தம் ஏறக்குறைய 7 கோடி ரூபாய் மின்சாரக் கட்டணம் பதிவு செய்யப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரின் தருபஹாவில் உள்ள சொகுசு ஹோட்டல் ஒன்று இரண்டாவது அதிக மின்சார கட்டணத்தை செலுத்துகிறது. இந்த ஹோட்டல் வழமையாக மாதாந்தம் 3 கோடி ரூபாயை செலுத்துகிறது.

கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையம் இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. அந்த இடத்துக்கு மாதந்தோறும் ஒன்றரைக் கோடி ரூபாய் மின்சாரக் கட்டணமாக செலுத்தப்படுகிறது. (ஐ)

# மனச்சாட்சி உள்ளோர் அமைச்சுகளை ஏற்கார்!

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில் அமைச்சுப் பதவிகளை மனசாட்சியுள்ள எவரும் பொறுப்பேற்க மாட்டார்கள் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையிலும் அமைச்சுப் பதவிகள், வரப்பிரசாதங்களை எவ்வாறு அனுபவிக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் குளியாப்பிட்டி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# சீன தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவருக்கு எதிராக நடவடிக்கை

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, நவ. 14

இலங்கையின் கடனை மறுசீரமைக்குமாறு சீனாவைக் கோரி கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர் சசி ஹெட்டியாராச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

"பிரதேச சபை உறுப்பினர் சசி ஹெட்டியாராச்சி நடத்திய இந்த போராட்டத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த தொடர்பும் இல்லை. எங்கள் கட்சி இராஜதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது மற்றும் அரசாங்கம் சீனாவுடனான கடன் விவகாரங்களை இராஜதந்திர உறவுகளின் மூலம் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது" என்று ரங்கே பண்டார கூறியுள்ளார்.

"கடன் மறுசீரமைப்பு என்பது நிதி அமைச்சரின் பிரச்னையே தவிர பிரதேச சபை உறுப்பினரின் பிரச்னை அல்ல. பிரதேச சபை உறுப்பினரை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து கட்சி விரைவில் தீர்மானிக்கும்" - என்றார். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."

*தியோடர் ரூஸ்வெல்ற் (அமரிக்க முன்னாள் ஜனாதிபதி)*

ஈழநாடு
Eelanadu
14.11.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சிங்களவர்களுக்கான தெளிவூட்டல் தொடர்பில்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் ஒரு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இவற்றுடன் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ். (புளொட்) ஆகியவற்றுக்கு எவ்வித தொடர்புமில்லை. வழமைபோல் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும் அவருக்கு ஆதரவாக செயல்பட்டுவரும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கூட்டமைப்பின் பெயரில் தனிவழியில் சென்றுகொண்டிருக்கின்றனர். பங்காளி கட்சிகளோ பிறிதொரு வழியில் இயங்கிவருகின்றனர். அண்மையில் ‘அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வு’ என்னும் தொனிப்பொருளில், இளைஞர் பௌத்த சங்கம் என்னும் சிங்கள அமைப்புடன் கலந்துரையாடியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வு என்றால் என்ன? பொருளாதார நெருக்கடியை சாதகமாகக் கொண்டு சிங்கள - பௌத்த சிந்தனை போக்குடையவர்களின் மனங்களை மாற்றமுடியுமென்று நம்புகின்றனரா? இந்தத் தலைப்பு தொடர்பில் இப்படித்தான் பொருள் கொள்ள முடியும்.

சிங்கள - பௌத்த சமூக அமைப்புக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளை தெளிவுபடுத்த வேண்டுமென்று எண்ணுவதில் தவறில்லை. ஆனால், அதற்கு தலைமை தாங்க வேண்டியவர்கள் யார் என்பதுதான் கேள்வியாகும். ஏனெனில், 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறானதொரு செயல்பாட்டை பரந்தளவில் முன்னெடுக்க வேண்டுமென்னும் அபிப்பிராயம் பலராலும் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் சம்பந்தனிடம் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அந்தப் பொறுப்பை அரசாங்கம்தான் (சிங்களவர்கள்தான்) செய்ய வேண்டும் என்பதே சம்பந்தனின் நிலைப்பாடாக இருந்தது. சம்பந்தன் கூறியதில் தவறில்லை. சிங்கள மக்களுக்கான தெளிவூட்டல்கள், அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவான சிங்கள அரசியலாளர்களால் செய்யப்பட வேண்டியதாகும். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் இதனை முன்னெடுத்திருக்கலாம். ஆனால், அது நடக்கவில்லை. புதிய அரசியல் யாப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவால் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. அது ஒன்றுதான் சிங்கள மக்களை நோக்கிச் சென்ற செயல்பாடாகும்.

ஆனால், அந்தக் குழுவின் தலைவராக இருந்த லால் விஜயநாயக்க ஒரு சிங்கள தேசியவாத முகம்கொண்டவரல்ல. அவர் தொடர்பில், சிங்கள - பௌத்த தேசியவாத தரப்பினர்கள் மத்தியில் சாதகமான அபிப்பிராயங்கள் இருக்கவில்லை. அதேபோன்று, அரசியல் யாப்பு ஆலோசனை குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்னவும் அவ்வாறான ஒருவர்தான். அவருக்கும் சிங்கள - பௌத்த தேசியவாத தரப்பினர் மத்தியில் செல்வாக்கில்லை. அரசியல் யாப்புக்கான முயற்சிகள் மிகவும் ஆர்ப்பாட்டமாக முன்னெடுக்கப்பட்டன. தமிழ் சூழலில் பலவாறான விவாதங்கள் இடம்பெற்றன. சமஷ்டி இருக்கின்றது ஆனால் பதுங்கியிருக்கின்றது என்றும் - இல்லை - இது ஒற்றையாட்சியை மீளவும் புதிய வடிவில் கொண்டுவருவதற்கான முயற்சியென்றும் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் நடந்ததோ மீளவும் தமிழர்களின் காலம் விரயமானது மட்டும்தான்.

விடயங்களை ஆழமாக நோக்கினால், இந்த முயற்சி இறுதியில் பிசுபிசுத்துவிடும் என்பதை முன்கூட்டியே அறிந்துதான் அரசாங்கம் இந்த விடயத்தில் ஆழமான கரிசைனையின்றி செயல்பட்டதோ என்றுதான் சந்தேகப்பட வேண்டியிருக்கின்றது. இந்த அனுபவங்களிலிருந்து பாடங்களை தமிழ் அரசியலாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள - பௌத்த தரப்பினருக்கு, சுமந்திரன் போன்ற அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரப்பகிர்வின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்த முடியாது. அதற்குப் பதிலாக அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவான நிலைப்பாடுடைய சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள், சிங்கள புத்திஜீவிகள் அனைவரும் ஒரு சிந்தனை மாற்றத்துக்கான முன்னணியாக இயங்க வேண்டும். அப்படி நடந்தால், அந்த முயற்சி ஒருவேளை சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கு உதவக்கூடும்.

# நளினியின் விடுதலை

## இலங்கை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வழிவகுக்க வேண்டும்!

**இராஜதந்திரி**

*இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நளினி 31 வருடங்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த விடுதலையை எடுத்து நோக்குமபோது இந்திய உயர் நீதிமன்றின் நியாயாதிக்கம் சுதந்திரமாக இருப்பதை அறிய முடிவதோடு இந்தியாவின் ஜனநாயக நடைமுறைகள் தொடர்ந்து உறுதிப்பாட்டுடன் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.*

*முப்பத்தியோர் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் சிறீபெரும்புதூரில் இடம்பெற்ற படுபாதகமான கொலைச் சம்பவமே ராஜீவ் காந்தியின் மரணம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*நேரு குடும்பம் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகவே இருந்து வந்தது. நேரு குடும்பத்தில் முன்னாள் பிரதமரான இந்திரா காந்தியும் அவரின் இரு புதல்வர்களும் மிகவும் கவலைக்குரிய முறையிலேயே உயிரிழந்திருந்தனர்.*

*இந்திரா காந்தியின் இளைய புதல்வாரன சஞ்சய் காந்தி தமது சொந்த விமானத்தை செலுத்திய போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இந்த அதிர்ச்சியிலிருந்து முழுமையாக விடுபட முன்னரே இந்திரா காந்தி அவரது நம்பிக்கைக்குரிய மெய்ப்பாதுகாவலர்களால் துடிதுடிக்க அவரதின் இல்லத்தின் முன்பாகவே சுட்டுக்கொல்லப்பட்டார்.*

*இதன்பின்னர் வலிந்து அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட ராஜீவ் காந்தி சிறீபெரும்புதூரில் தமது தேர்தல் பிரசாரத்தின் போது தற்கொலை குண்டுதாரி ஒருவரால் கொல்லப்பட்டார். இக்கொலையின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளே இருந்தனர் என்று இந்திய புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து ராஜீவ் காந்தியின் கொலையை முன்னின்று நிகழ்த்தியவர்கள் ராஜீவ் கொலையான இடத்திலேயே பலியான நிலையில் கொலையாளிகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்று கருதப்பட்ட நளினி, சாந்தன், பேரறிவாளன், முருகன் உட்பட ஆறு பேர் 31 வருட கால சிறைவாசத்தின் பின்னர் தற்போது இந்திய உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.*

*ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது. அமைதிப் படையாக இலங்கையின் வடக்கு - கிழக்கில களமிறங்கிய இந்திய இராணுவம் பொறுமையிழந்து போரில் குதித்தது துரதிர்ஷ்டமானதே.*

*ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் மூலமும் அரசியல் அழுத்தங்கள் மூலமாகவும் இந்திய இராணுவத்தினரை வாபஸ் பெற வைத்ததோடு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வல்லமையையும் நிரூபித்து தமது போராட்டத்தின்மீதான உறுதிப்பாட்டையும் நிரூபித்தமையோடு நின்றிருக்க முடியும். ஆனால், பின்னர் ராஜீவ் காந்தியை கொலை செய்யுமளவுக்கு சன்னதம் கொண்டமை வடக்கு - கிழக்கு தமிழர்களை அரவணைத்து நின்ற இந்தியாவின் கரங்களையே விலக்கி விடும் சூழ்நிலையை உருவாக்கிவிட்டதோடு தியாகங்கள் பலவற்றோடு முன்னெடுக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தி முற்று முழுதாக முறியடிக்கவும் வைத்திருந்தது. கூடவே, சர்வதேச சமூகத்தின் அனு தாபத்தை வடக்கு - கிழக்கு மக்கள் இழக்கும் வாய்ப்பையும் பலப்படுத்தியிருந்தது.*

*தற்போது ராஜீவ் காந்தியின் அகாலமரணமும் வரலாறாகிப்போன நிலையில் இந்தியாவும் தனது நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளதையே பேரறிவாளன் முன்பதாகவும் நளினி மற்றும் ஆறு பேர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டுகின்றது.*


*இந்திய உபகண்டத்தின் ஓர் முக்கிய அரசியல் தலைவரையே கொலை செய்ய உடந்தையாக இருந்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் முழுமையாக விடுதலையாகியுள்ளமை இலங்கையின் ஆட்சியாளர்களையும், நீதித்துறையினரையும் தற்போது தமிழ் அரசியல் கைதிகளின் சிறைவாசம் குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலையை உருவாக்கி உள்ளதென்றே கருத முடியும். ஏற்கனவே பலதரப்பட்ட பாரதூரமான கொலை முயற்சி குற்றச்சாட்டுகள் தொடர்பாக சிறைவாசம் மற்றும் நீண்ட கால சிறைவாசம் அனுபவித்த தமிழ் அரசியல் கைதிகள் பலர் கடந்த சில வருடங்களில் விடுதலையாகியுள்ளனர்.*

*இவ்வாறு விடுதலையானவர்களில் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மீதான கொலை முயற்சி, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான கொலை முயற்சி என்பவை தொடர்பாக கைதாகி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டவர்களும் அடங்குவர்.*

*இந்த விடுதலைகள் குறித்து அண்மையில் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தம்மை கொல்ல முயற்சித்தவரையும் விடுதலை செய்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகக் கூறியிருந்தார்.*

*ஏற்கனவே, பல வருடங்கள் தமது இளமையையும் தொலைத்து சுற்றம் சூழலையும் இழந்து சிறைவாசம் அனுபவித்து வருகின்ற எஞ்சியுள்ள இலங்கையின் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் - அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய முன்வருவது நல்லிணக்க முயற்சிகளை மேலும் பலப்படுத்துவதாகவே இருக்க முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம்.நெருக்கடிகளுக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவுகள் மகிழ்ச்சி தரும். நட்புகளிடம் எச்சரிக்கை அவசியம்.

**இடபம்**

குடும்பத்தில் சில பிரச்னைகள் தோன்றும். உணர்ச்சி வசப்பட வேண்டாம்.உங்கள் தன்மானத்தை சீண்டும் வகையில் சிலர் செயல்படலாம். அமைதி காப்பது நல்லது. பேச்சில் கவனம் தேவை.

**மிதுனம்**

செயலை நிறைவேற்றுவதற்கு விடாமுயற்சி தேவை. எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.விரும்பியதை அடையும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எண்ணம் நிறைவேறும். மனக்குழப்பம் தீரும்.

**கடகம்**

புதிய முயற்சிகளில் கவனம் செல்லும். எதிர்பாராத செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். எண்ணம் நிறைவேறும். அறிவாற்றல் வெளிப்படும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**

நீண்ட நாளாக வராமல் இருந்த பணம் வசூலாகும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.எதிர்பார்ப்பு நிறைவேறும். விலகிச் சென்ற உறவினர் தேடி வருவர். உங்கள் பேச்சுக்கு மதிப்பு ஏற்படும்.

**கன்னி**

புதிய முயற்சியில் லாபம் வரும்.வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் திறமை வெளிப்படும் எதிர்பார்த்த வருமானம் உண்டு.

**துலாம்**

எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் போகும். முயற்சி இழுபறியாகும்.நண்பருக்கு உதவப்போய் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். புதிய நட்புகளிடம் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவருடன் நெருக்கம் வேண்டாம்.

**விருட்சிகம்**

அமைதி காப்பது நல்லது. நட்புகளிடமும் மோதல் உண்டாகும். பிறர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.நினைப்பது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். நிதானமாக செயல்படுவது நல்லது.

**தனுசு**

எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.குடும்பத்தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணையின் விருப்பப்படி செயல்படுவீர்கள். நீண்ட நாளுக்குப்பின் மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மகரம்**

உற்சாகமுடன் செயல்படுவீர்கள். செல்வாக்கு கூடும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.நீங்கள் நினைத்ததை அடைவீர்கள்.துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**கும்பம்**

பிள்ளைகள் வழியே செலவு வரலாம். செயல்களில் தடை, தாமதம் ஏற்படும்.குடும்பத்தினரால் சங்கடத்திற்கு ஆளாகலாம். எதிர்பார்த்தவற்றில் நன்மை கிடைக்காது. வீண்சங்கடத்திற்கு ஆளாகலாம்.

**மீனம்**

பணிஇடத்தில் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பர். உடல்நிலையில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்.

# ஆயுதமேந்தி போராட திட்டம்; மூவர் மீது என்.ஐ.ஏ. வழக்கு!

## - முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் மதுக்கடைகளை தாக்கவும் திட்டம்-

சேலம், நவ. 14

சேலத்தில், நாட்டு கைத்துப்பாக்கிகள் வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 3 பேர், உலகத் தமிழ் நீதிமன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி மதுக்கடைகள், குவாரிகள் உள்ளிட்டவற்றின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தனர் என்று தேசிய புலனாய்வு முகாமை (என். ஐ. ஏ.) தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் ஓமலூரை அடுத்த புளியம்பட்டியில், கடந்த மே 19ஆம் திகதி ஓமலூர் பொலிஸார் மேற்கொண்ட வாகன சோதனையின்போது, இரு சக்கர வாகனத்தில் வந்த 2 இளைஞர்களிடம் இருந்து, நாட்டு ரக கைத்துப்பாக்கிகள் 2, வெடிமருந்து, முகமூடி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில், சேலம் சந்நியாசிகுண்டு பகுதியைச் சேர்ந்த நவீன் சக்ரவர்த்தி (25), செவ்வாய்பேட்டை சஞ்சய் பிரகாஷ் (24) என்பதும், பொறியியல் பட்டதாரிகளான இருவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பற்று கொண்டு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தமை தெரிய வந்தது.

சேலம் செட்டிச்சாவடி பகுதியில், அவர்கள் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து கைத்துப்பாக்கிகளை தயாரித்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களுடன் தொடர்பில் இருந்த சேலத்தைச் சேர்ந்த கபிலர் என்பவரையும் பொலிஸார் கைது செய்தனர். மூவர் மீதும் ஆயுதச் சட்டம், வெடிபொருட்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு பதியப்பட்டது.

இந்த வழக்கு, கடந்த ஓகஸ்ட் மாதத்தில் என். ஐ. ஏ-விடம் ஒப்படைக்கப்பட்டது. சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த மூவரையும், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் என்ஐஏ போலீஸார் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், நவீன் சக்ரவர்த்தி, சஞ்சய் பிரகாஷ், கபிலர் மூவர் மீதும் என்ஐஏ சார்பில் நேற்று முன்தினம் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# விடுதலையான முருகன், சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் சேர்ப்பு

திருச்சி, நவ. 14

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து கடந்த 31 ஆண்டுகளுக்குப் பிறகு வேலூர் மத்திய சிறையில் இருந்து சாந்தன் மற்றும் முருகன் நேற்று விடுதலையாகினர்.



இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் விடுதலைக்கு பிறகு திருச்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வேலூர் மத் திய சிறையில் தண்டனை அனுபவித்து வந்த சாந்தன் மற்றும் முருகன் நளினி உள்ளிட்ட 6 பேர் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

சாந்தன், முருகன் ஆகியோர் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதால், விடுதலைக்குப் பிறகு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் திருச்சியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

விடுதலையான இருவரும் திருச்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்படும்போது அங்கிருந்தவர்களுக்கு கை அசைத்து, கும்பிட்டு சென்றனர். (ஐ)

# 11 இலங்கை மீனவர்கள் இந்திய கடலில் கைது!

சென்னை, நவ. 14

வங்காள விரிகுடாவில் ரோந்து சென்ற இந்திய கடலோர காவல்படை கப்பல் விக்ரஹா, இந்திய பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் மீன்பிடித்த 11 இலங்கை மீனவர்களை கைது செய்தது. அத்துடன், இரண்டு மீன்பிடி படகுகளையும் பிடித்தது.

இலங்கை மீன்பிடி கப்பல்கள் இந்திய பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் செல்லுபடியாகும் உரிமங்கள் மற்றும் ஆவணங்கள் இல்லாமல் மீன்பிடியில் ஈடுபட்டன.

எம். இசற். ஐ. சட்டம் 1981 இன் படி, இந்திய பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்பிடித்தல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவை குற்றமாகும்.

இதன் மூலம் இலங்கை மீன்பிடிக் கப்பல் சட்டத்தை மீறிய குற்றமாகும். இதையடுத்து, மீன்பிடி படகுகள் மற்றும் மீனவர்கள் கடல் மீன்வளத் துறையிடம் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படும்.

# அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் பா. ஜ. க ஆட்சி!



## உள்துறை அமைச்சர் அமித் ஷா

சென்னை, நவ. 14

தமிழகத்துக்கு மத்திய அரசு செய்துள்ள நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். கட்சியினர் கடுமையாக உழைத்தால் அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் பா. ஜ. க. ஆட்சி அமையும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் கட்சியின் நிர்வாகிகளை சந்தித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் 2 நாட்கள் தமிழகம் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 14

இருபது லீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் உரும்பிராயை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பிலேயே குறித்த நபர் கைதானார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தாவடி விபத்தில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம், நவ. 14

காங்கேசன்துறை வீதி தாவடி சந்தியில் முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புனித யாகப்பர் ஆலய படுகொலை; 29ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு






**யாழ்ப்பாணம், நவ.14**

**குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் விமான குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 9 பேரின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.**

அதிகாலை 5.30 மணிக்கு திருப்பலியும் அதனைத்தொடர்ந்து நினைவஞ்சலி நிகழ்வும் பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில், விமானத் தாக்குதலில் உயிர் நீத்தவர்களின் உறவுகளால் ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி நடைபெற்றது.

1993 நவம்பர் 13ஆம் திகதி இந்த ஆலயத்தின் மீது விமானப் படையினர் நடத்திய குண்டுவீச்சில் ஆலயம் பெரும் சேதமடைந்தது. இதன்போது, ஆலயத்தில் வழிபாடாற்றிய 9 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். பல்கலை. - பங்கு பரிவர்த்தனை இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன் தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அவை அறையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதிமுகா மைத்துவத்துறையும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் இணைந்து எதிர்காலத்தில் நிதிமுகாமைத்துவ மாணவர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான ஏற்பாடுகளுடன் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சார்பில், அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜீவ பண்டாரநாயக்கவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

நிகழ்வின் போது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சட்ட அலகின்தலைவர் றேணு ரணதுங்க, யாழ். கிளை முகாமையாளர் எஸ்.சபாநந்தன், சிரேஷ்ட சந்தைப்படுத்தல் பிரதித் தலைவர் நிரோஷன் விஜேசுந்தர, கிளை வலையமைப்பு முகாமையாளர் நிஷாந்த பட்டேகல மற்றும் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஷானிகா ராமநாயக்க ஆகியோரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதிமுகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர். யோகேந்திர்ராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி,

1. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதிமுகாமைத்துவத் துறையினால் ஒருங்கமைக்கப்படும் முதலீட்டுச் சந்தை தொடர்பான மேம்படுத்தல் நிகழ்வொன்றை நடீத்துவதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை வருடாந்தம் ரூபாய் இரண்டு இலட்சம் நிதிப் பங்களிப்பை வழங்கும்.

2. ஒவ்வொரு ஆண்டிலும், நிதிமுகாமைத்துவ சிறப்புக் கற்கைநெறியில் அதியுயர் மதிப்பெண்ணைப் பெறும் மாணவன் அல்லது மாணவிக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் விருதொன்று வழங்கப்படும்.

3. நிதிமுகாமைத்துவத் துறை மாணவர்களின் கற்றல் மற்றும் உள்ளகப் பயிற்சி நடவடிக்கைகளில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும், நிதிமுகாமைத்துவத் துறையும் இணைந்து செயல்படுதல். இயலளவிலான வெற்றிடங்களுக்கு அமைய கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிதி முகாமைத்துவத் துறை மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும்.

4. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வாணிப இணைப்பு அலகுக்கும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும் இடையிலான கூட்டு நடவடிக்கைகளுக்கென நிதிமுகாமைத்துவத் துறையினால் இணைப்பாளர் ஒருவரை நிமித்தல்.

5. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் நடாத்தப்படும் நிதிச் சந்தையியல் உயர் தகமைச் சான்றிதழ் கற்கை நெறிக்கான வளவாளர்களை வழங்குவதற்கும், கற்கை நெறிக்கான விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்குமான ஆதரவை நிதி முகாமைத்துவத்துறை வழங்குதல்.

6. நிதிமுகாமைத்துவத் துறையினால் முதலீட்டுச் சந்தை தொடர்பான கற்றல் நடவடிக்கைகளுக்காக செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகளை நடாத்துவதற்கு இரு தரப்பாரும் இணங்கி - இணைந்து செயற்படுதல்.

7. முதலீட்டுச் சந்தை தொடர்பான கற்றல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் இணைந்து செயல்படுதல். ஆகிய முக்கிய உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. (அ)

## மன்னாரில் விபத்து ஒருவர் உயிரிழப்பு!

மன்னார், நவ. 14



வீதியை விட்டு விலகிய பட்டா ரக வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி இசைமாலை தாழ்வு பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

மன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் உள்ள மரத்தில் மோதியது. இதில், வாகன சாரதிக்கு அருகில் இருந்து பயணித்தவரே உயிரிழந்தார்.

வாகனத்தின் சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும், அவர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பூசகர் வேடத்தில் சென்றவர் சிவலிங்கத்தை களவாடினார்!

யாழ்ப்பாணம், நவ. 14

மாதகல் சம்பில்துறை சம்புநாதஸ்வரர் ஆலயத்தின் மூல மூர்த்தியான சிவலிங்கம் திருடப்பட்டுள்ளது. இந்த சிவலிங்கம் சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியானது என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் காசி புனித பிரதேசத்தில் இருந்து கடந்த 1998ஆம் ஆண்டு ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்தின் மூல மூர்த்தியான லிங்கேஸ்வரரே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரீ. வி, கண்காணிப்பு கமெரா பதிவுகளின்படி பூசகர் வேடத்தில் ஆலயத்தினுள் உட்புகுந்தவரே சிவலிங்கத்தை திருடி சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

# மரநடுகைக்கு கிடங்கு வெட்டியபோது மர்மபொருள் வெடித்து இருவர் காயம்!

யாழ்ப்பாணம், நவ. 14

**கோப்பாய், கைதடி வீதியின் ஓரமாக மரநடுகைக்காக கிடங்கு வெட்டியபோது மர்மப்பொருள் வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.**

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

நீர்வேலியை சேர்ந்த தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று மரநடுகையில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் பணியாளர்களே காயமடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆசிரிய பயிற்சி மாணவரின் அடாவடியால் பதற்றநிலைமை!



வடமராட்சி, நவ. 14

கல்வியியல் கல்லூரியில் பயிலும் மாணவர் ஒருவர் வாளை வைத்திருந்தவாறு அயலவர்களை மிரட்டியதுடன், வீட்டின் மீது கற்களை எறிந்தும் கதவுகளை உடைத்தும் அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு முள்ளியானில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

இளைஞரால் தாக்கப்பட்ட வீட்டில் வயோதிப பெண் தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில், நேற்று அதிகாலை அங்கு சென்றவர் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், அந்தப் பெண் அயலவர்களை உதவிக்கு அழைத்துள்ளார். இவ்வாறு வந்தவர்களையே அந்த இளைஞர் வாளை வைத்திருந்தவாறு மிரட்டியுள்ளார்.

இரு குடும்பங்களிடையே நிலவிய முரண்பாடு நேற்று முன்தினம் முற்றிய நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிய வருகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02 -03)

# எரிகாயமடைந்த மூதாட்டி ஒரு மாதத்தின் பின் மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 14

எரிகாயங்களுடன் யாழ். போதனா மருத்துமவனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி சிகிச்சை பலனின்றி ஒரு மாதத்தின் பின் உயிரிழந்தார்.

இரத்தினம் தங்கமுத்து (வயது 80) என்ற காரைநகரை சேர்ந்த மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார்.

மூதாட்டி குளிப்பதற்காக சுடுதண்ணீர் வைத்துப் பானையை தூக்க முற்பட்ட வேளை சேலையில் தீ பற்றியுள்ளது. தீ பரவியதை அடுத்து சுடுதண்ணீர்ப் பானை கை தவறி வீழ்ந்த போது, சுடுதண்ணீராலும், சேலையில் பற்றிய தீயாலும் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

கடந்த ஒக்ரோபர் 11ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி, நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பாக யாழ். போதனா மருத்துவ மனையின் திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் நடத்தினார். (ஐ)





# பட்டத் திருவிழாவுக்காக தயாராகிறது வடமராட்சி!

வடமராட்சி, நவ. 14

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமும் சிறப்புமிக்க வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவுக்காக வடமராட்சி தயாராகி வருகின்றது.

பட்டங்கள் கட்டுதல், பட்டங்களை வர்ணகடதாசிகளால் அலங்கரிக்கும் செயல்பாடுகள் என்பன இரவுபகலாக வடமராட்சி இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறையின் பிரபலமான பட்டத் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் தைப்பொங்கல் தினத்தில் நடைபெறுகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி மாலை வல்வெட்டித்துறை திறந்த வெளிகடற்கரையில் இப் பட்டத்திருவிழாப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் சுமார் 85 பட்டங்கள் ஏற்றப்படவுள்ளன என்று வடமராட்சி பட்டக் குழுவின் நெறிப்படுத்துநர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த இரு ஆண்டுகளாக பட்டத் திருவிழா நடைபெறாத நிலையில் இந்த ஆண்டு பட்டத் திருவிழா நடைபெறவுள்ளது. இது வடமராட்சி மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-02)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# அச்சுவேலி மருத்துவமனையில் பற்சிகிச்சை பிரிவு திறந்துவைப்பு



யாழ்ப்பாணம், நவ. 14

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பற்சிகிச்சை நிலையம் மேம்படுத்தப் பட்டு நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்துவைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் ப. சத்தியகுமார், அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவ நிபுணர் பி. குணதீபன் மற்றும் திரு.மதுரமணி இராசையா ஆகியோர் பங்கேற்று சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்தனர்.

அச்சுவேலி பிரதேச மருத்துவ மனையில் இயங்கி வரும் பற்சிகிச்சை நிலையம் நீண்ட காலமாக வசதிகளற்ற நிலையில் இயங்கி வந்தது. மக்கள் நல்வாழ்வு மையத்தின் 16 இலட்சம் ரூபாய் நிதி உதவியில் இந்த நிலையம் மேம்படுத்தப்பட்டது.

இந்த சிகிச்சை நிலையம் மூலமாக அச்சுவேலி மற்றும் அதனை அண்மித்த பல கிராம மக்கள் நன்மையடையவுள் ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

# அரசமைப்பு பேரவையில் உறுப்பினராக விரும்புவோர் விண்ணப்பிக்க முடியும்!

கொழும்பு, நவ. 14

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு அமைவாக அரசமைப்பு பேரவைக்கான சிவில் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க முடியுமென சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பாகவும் நேர்மையாகவும் பொது அல்லது சமூக செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் அரசியல் கட்சி உறுப்பினர்கள் அற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உறுப்பினர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் 2 உறுப்பினர்கள், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சியின் உறுப்பினர் மற்றும் சிவில் உறுப்பினர்கள் 3 பேர் அடங்கலாக அரசமைப்பு பேரவையில் 10 பேர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

21ஆவது திருத்தத்திற்கு அமைவாக, பிரதம நீதியரசர் தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் மற்றும் நீதிபதிகள், சட்ட மா அதிபர், மத்திய வங்கி ஆளுநர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ் மா அதிபர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான ஒம்புட்ஸ்மன், சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே நியமிக்கப்படல் வேண்டும்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 17 துறைசார் கண்காணிப்பு செயற்குழுக்களுக்கான தலைவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

# இரும்பு கம்பியின் விலை குறைந்தது



கொழும்பு, நவ. 14

அண்மைக் காலத்தில் மிகப்பெரியளவில் விலை அதிகரிப்பை பதிவு செய்திருந்த இரும்பு கம்பியின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, ஒரு தொன் கம்பியின் விலை ஒரு இலட்சம் ரூபாயால் குறைவடைந்துள்ளது. கடந்த மாதம் 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயாக காணப்பட்ட ஒரு தொன் கம்பியின் விலை தற்போது 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயாகக் குறைவடைந்துள்ளது.

இதன்படி, 2000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 10 மில்லிமீற்றர் இரும்பு கம்பி, தற்போது 1,635 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 2,700 ரூபாய்க்கு விற்கப்பட்ட 12 மில்லிமீற்றர் கம்பி, 2,395 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அத்துடன் 16 மில்லிமீற்றர் கம்பியின் விலை 4,325 ரூபாவாக குறைவடைந்துள்ளது. இதேவேளை 50 கிலோகிராம் நிறையுடைய சீமெந்து ஒரு மூடை தற்போது சந்தையில் 2,975 ரூபாவுக்கு விற்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படகு கவிழ்ந்து விபத்து; மூன்று சிறுமிகள் பலி!

கொழும்பு, நவ. 14

வாவியில் படகு கவிழ்ந்து இடம்பெற்ற விபத்தில் காணாமல் போன இரு சிறுமிகளின் சடலங்களும் மீட்கப்பட்டன. இதனால், இந்த விபத்தில் மூவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகோதரிகளாக 18 மற்றும் 16 வயது இரு சிறுமிகளின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை - சூரியவெவ மஹாவலிகடார வாவியில் நேற்று முன்தினம் 8 பேர் படகில் பயணித்தனர். இந்தப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஐவர் காப்பாற்றப்பட்டனர். மூவர் காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில், 10 வயது சிறுமி நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். மற்றைய இருவரும் தேடப்பட்ட நிலையில், நேற்று அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

விபத்துக்கு உள்ளானவர்கள் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் உறவினர் வீடு ஒன்றில் நடந்த விழாவில் கலந்து கொள்ள வந்த நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அதி அவதானத்துக்குரியதாக சுகாதாரத்துறை மாறியுள்ளது

## மருத்துவர்களின் உரிமை சங்கம்

கொழும்பு, நவ. 14

நாட்டில் இன்று அதி அவதானத்துக்குரிய துறையாக சுகாதாரத்துறை மாறியுள்ளதாக மருத்துவர்களின் மருத்துவ மற்றும் குடிமை உரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் இன்று சுகாதாரத்துறை எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலேயே அதிகம் பேசப்படுகின்றது. சுகாதாரத்துறை என்பது இன்று அவதானத்துக்குரிய துறையாக மாறியுள்ளது.

மருந்துகளுக்கான தட்டுப்பாடு என்பது இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரிகள் அசமந்தமடைந்துள்ளனர்.

இதேபோன்று மருந்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்து செல்கின்றன. சிறுவர்கள், கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் எதிர்கொண்டுள்ள போசணை குறைபாட்டு பிரச்னைகளால் சுகாதாரத்துறை என்பது இன்று சவாலுக்குரிய துறையாக மாறியுள்ளது.

சுகாதத்துறையின் செயலிழப்பு காரணமானவர்களுக்கு வெகுவிரைவில் நாம் பாடம் புகட்டுவோம் - என்றார். (ஐ)

# மீனவர்கள் குழு மோதல் பதினான்கு பேர் காயம்!

## 13 படகுகள், 8 வாடிகள் தீக்கிரை

அம்பாறை - மாதுறு ஓயா நீர்த்தேக்க மீனவர்களுக்கும் பதியத்தலாவை மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று மஹாஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 14 பேர் மஹாஓயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் அம்பாறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாதுறு ஓயாவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பதியத்தலாவ மீனவர்களை மாதுறு ஓயா மீனவர்கள் மடக்கிப் பிடித்த சம்பவத்தையடுத்தே இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் 8 வாடிகள், 13 படகுகள் மற்றும் பெருமளவிலான மீன்பிடி வலைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மூளைசாவடைந்த மாணவியால் இரண்டு பேர் உயிர் தப்பினர்

கண்டி, நவ. 14

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்ற நிலையில், விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவி ஒருவரின் உடல் அவயவங்களால் இருவர் உயிர்பிழைத்தனர்.

மாத்தறை - தங்கல்ல பகுதியைச் சேர்ந்த லக்சானி கலபதி என்ற மாணவி கடந்த 31ஆம் திகதி பல்கலைக்கழகத்திலிருந்து விடுதி நோக்கி சென்ற போது வாகன விபத்தில் சிக்கி பலத்த காயங்களுடன் கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

அவர், மூளைச்சாவு அடைந்ததையடுத்து அந்த மாணவியின் உடல் அவயவங்களை நோயாளர்களுக்கு வழங்க அவரது பெற்றோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மாத்தளையைச் சேர்ந்த 47 வயது பெண் ஒருவருக்கும், இரத்தினபுரியைச் சேர்ந்த 27 வயது இளைஞருக்கும் மூளைச்சாவடைந்த மாணவியின் இரண்டு சிறுநீரகங்களும் வெற்றிகரமாக பொருத்தப்பட்டன என்று கண்டி தேசிய மருத்துவமனை அறிவித்துள்ளது. (ஐ)

# குழந்தைகளைக் கைவிட்டு தலைமறைவான பெற்றோர்!

தமது குழந்தைகள் இருவரை வீடு ஒன்றில் கைவிட்டுவிட்டு பெற்றோர் தலைமறைவான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காலி - அம்பலாங்கொடை - குலீகொட - ரங்கோத் விஹாரை மாவத்தையில் இடம்பெற்றுள்ளது.

வீடு ஒன்றில் 2, 3 வயதான பெண் குழந்தைகள் தனித்து இருக்கின்றனர் என்று அம்பலாங்கொடை பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு அயலவர்கள் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் இரு குழந்தைகளையும் மீட்டனர்.

தற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள இரண்டு குழந்தைகளையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைப்பதற்கான அனுமதியை நீதிமன்றில் பெற நடவடிக்கை எடுக்கப்படுவதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழந்தைகளின் பெற்றோரைக் கண்டறிய பொதுமக்களின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 6 மாதத்தின் பின் இறக்குமதி

கொழும்பு, நவ. 14

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒக்ரேன் 95 ரக பெற்றோல், மசகு எண்ணெய் ஆகியவற்றை கப்பலில் இருந்து இறக்கும் பணி ஆரம்பித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக ஒக்ரேன் 95 பெற்றோலின் இறக்குமதி ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து. கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் முதன்முறையாக இந்த சரக்குகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

7 மில்லியன் டொலர்களை செலுத்த முடியாமல் சுமார் 55 நாட்களாக இலங்கை கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கச்சா கப்பலில் இருந்து கச்சா எண்ணெயை இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு



நூல் அறிமுகம்:

— மு. நித்தியானந்தன்

# திருச்செந்தூரனின் ‘உரிமை எங்கே?’: மலையக எழுச்சியின் அலாரம்!

## “உன் பொம்பளையை நீ உண்மையாகத்தான் கல்யாணம் முடித்தாயா?”

கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற திருச்செந்தூரனின் ‘உரிமை எங்கே?’ (5.02.1961) என்ற சிறுகதை, மலையக மக்களின் அடிப்படை உரிமைக்குரலை எழுத்திலே வார்த்த முதல் கதையாக வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தக் கதை மலையக மக்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதியின் சரித்திரத்திலே ஊன்றி நிற்கிறது.

1948ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால், வாக்குரிமை இழந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் நோக் கில் 1949ஆம் ஆண்டு இந்திய, பாகிஸ்தானிய குடியிருப்பாளர்களுக்கான (பிரஜாவுரிமை) சட்டத்தை இலங்கை அரசு அடுத்த ஆண்டிலேயே கொண்டு வந் தது. இச்சட்டத்தின்கீழ் மலையகத் தமிழர்கள் பிரஜா வுரிமை பெறுவது என்பது பெருங்கடினமாயிருந்தது.

ஆங்கிலத்தில் இருந்த இந்த விண்ணப்பப் பத்திரங்கள் எட்டு வித்தியாசமான வகைகளில் இருந்தன. சரியான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் உடனேயே நிராகரிக்கப்பட்டன. நன்கு படித்தவர்களே இந்த விண்ணப்பப் படிவங்களை நிரப்பக் கஷ்டப்பட்டிருப்பார்கள். அனைத்திற்கும் ஆதாரங்கள் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். 1949ஆம் ஆண்டுச் சட்டத்தை எதிர்த்து இலங்கை - இந்திய காங்கிரஸ் போராட்டம் நடத்தியது.

இந்தச் சட்டத்தை பகிஷ்கரித்து, யாரும் இதற்கு விண்ணப்பிக்கக்கூடாது என்று இலங்கை - இந்திய காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது.

பிரஜாவுரிமை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இலங்கை அரசு 1949 தொடக்கம் 1951வரை இரண்டு ஆண்டுகால அவகாசம் கொடுத்திருந்தது. பகிஷ்கரிப்பை மேற்கொண்ட இலங்கை - இந்திய காங்கிரஸ், பத்து மாதங்களின் பின்னர் தனது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, மக்களை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரியது.

மக்கள் லட்சக்கணக்கில் முண்டியடித்துக்கொண்டு திடீரென விண்ணப்பப்படிவங்களை கோரியபோது, விநியோகிக்க அரசிடம் அந்த அளவு படிவங்களும் இருந்திருக்கவில்லை. அவசரகதியில் பிழைகளோடு விண்ணப்படிவங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

அரசு எளிதாக அவற்றை நிராகரிக்கக் கூடியதாகவிருந்தது. விண்ணப்பங்களை விசாரித்த விசாரணை அதிகாரிகள் கடூரமானவர்களாக இருந்தனர். மொத்தம் கிடைக்கப்பெற்ற 237,034 விண்ணப்பங்களில் 160,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

விண்ணப்பித்த 825,000 பேரில் 134,188 பேர் மட்டுமே பிரஜாவுரிமை பெற்றனர். விண்ணப்பித்தவர்களில் 16.2 வீதத்துக்கு மட்டுமே பிரஜாவுரிமை கிடைத்தது. 83 வீதமானோர் நிராகரிக்கப்படிருந்தனர்.

> ‘உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் பிரசா உரிமை தரப்படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிஷனர் முன்னிலையில் சத்தியம்செய்து, பிரசா உரிமை சர்டிபி கெட்டைப் பெற்றுக்கொள்ளவும்.’ என்று திகதியும் குறிக்கப்பட்டிருந்த கடிதம் கிடைத்தால் சொல்ல வேண்டுமோ? என்று, பிரசா உரிமைக்காக சுப்பையா நாயக்கர் பட்டபாட்டை திருச்செந்தூரன் நன்கு எழுதிச் செல்கிறார்.

‘காலை மூன்று மணி. பறங்கிமலைத் தோட்டம் ஏழாம் நம்பர் லயத்தில் உள்ள சுப்பையா நாயக்கரின் காம்பிராவில் கொழுந்து கணக்கப்பிள்ளையிடம் கைமாற்றாக வாங்கிய அலாரம் கணீர் என்று ஒலித்தது’ என்று திருச்செந்தூரனின் ‘உரிமை எங்கே?’ என்ற சிறுகதை ஆரம்பிக்கிறது.

இந்த அலார ஒலி மலையகச் சிறுகதையின் எழுச்சிக்கான அலார ஒலி.

மலையக உரிமையின் எழுச்சிக்கான அலார ஒலி.

சுப்பையா நாயக்கரை மட்டுமல்ல, மலையக மக்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பும் அலார ஒலி.

ஒரு சிறுகதைக்கான அற்புதமான ஆரம்பம் இது.

“...இன்னிக்கே கண்டியிலே போய்ச் சத்தியம் செஞ்சிப்புட்டா, நாமெல்லாரும் இந்த நாட்டிலே ‘பெரசை’ ஆயிரலாமுடி. வரச் சொல்லி ‘கண்டுரோலர்’ எழுதியிருக்காருன்னு நேத்துச் சொன்னேனே.” என்று அரைத் தூக்கத்தில் இருந்த மீனாட்சியை எழுப்புகிறார் சுப்பையா நாயக்கர். பதினாறு மைல் தொலைவில் இருக்கும் கண்டிக்குப் போவதற்கு வீட்டாரை எழுப்பி, ரணகளப்படுத்தும் சுப்பையா நாயக்கரின் தாபத்தை அழகாக விபரித்துச் செல்கிறார் திருச்செந்தூரன்.

‘சுப்பையா நாயக்கருக்கு அன்று நிலைகொள்ள வில்லை. ஆமாம், இருக்காதா என்ன? எத்தனை ஆண்டுகள்?

அந்த ஒரு கடிதத்திற்காக அவர் தவியாய்த் தவித் தார். ஓராண்டா, ஈராண்டா? பத்தாண்டுகள் எப்ப டியோ ஓடி மறைந்துவிட்டன. அவருடைய பாட்டன் இந்தியாவிலிருந்து வந்தது ஏதோ உண்மைதான். சுப்பையாவின் தந்தையோ கடலைப்பற்றி கேள்விப்படாமலே தேயிலைக்கு உரமானார். சுப்பையாவுக்குக் கடல் என்ன நிறம், எப்படி இருக்கும் என்று கண்டவர்கள் சொல்லக் கேள்விதானேயன்றிக் கண்டதேயில்லை. ஈழத்தின் மத்திய பகுதியில் இருக்கும் ஒரு தேயிலைத் தோட்டத்தில் உழைக்கும் ஒரு தொழிலாளிதான் நாயக்கர்.

சுமார் பதினோர் ஆண்டுகளுக்கு முன்னர் - பிரஜா வுரிமைச் சட்டம் வந்த புதிதில் தம்மையும், தம் குடும்பத்தையும் இலங்கைப் பிரசைகளாய்ச் சேர்த்துக்கொள் ளுமாறு மனு போட்டவர்களில் அவரும் ஒருவர்.

மனு போட்டதும் உரிமை கிடைத்துவிட அவ ரென்ன லட்சாதிபதியா? எத்தனை விசாரணைகள், எவ்வளவு பணச் செலவு, அலைச்சல்? அப்பப்பா, அவர் தமது பிறப்புரிமையைப் பெறும் பொருட்டு பஸ்களுக்கும், தபால் அலுவலகத்துக்கும் கொடுத்த பணம் இன்று அவரிடம் இருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் தோட்டத்திற்காவது அவர் அதிபதியாக இருந்திருப் பார். பாவம், இத்தனை இன்னல்களுக்குப் பின்னர், ஒருநாள் அந்தக்கடிதம் வந்தது.

‘உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் பிரசா உரிமை தரப்படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிஷனர் முன்னிலையில் சத்தியம்செய்து, பிரசா உரிமை சர்டிபி கெட்டைப் பெற்றுக்கொள்ளவும்.’ என்று திகதியும் குறிக்கப்பட்டிருந்த கடிதம் கிடைத்தால் சொல்ல வேண்டுமோ? என்று, பிரசா உரிமைக்காக சுப்பையா நாயக்கர் பட்டபாட்டை திருச்செந்தூரன் நன்கு எழுதிச் செல்கிறார்.

‘ஆண்டுகள் ஆறு. எங்கும் பிரசா உரிமைப் பேச்சி லேயே உருண்டோடின.’ என்கிறது கதை .

உண்மைதான். 1949ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி கோரப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவு எடுத்து முடிப்பதற்கு அர சிற்கு 13 ஆண்டுகள் எடுத்தன.

மூன்று முறை சுப்பையா நாயக்கர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார். அந்த விசாரணையில், “உன் பொம்பளையை நீ உண்மையாகத்தான் கல்யாணம் முடித்தாயா?” என்றெல்லாம் கேள்விகள் வீசப்பட்டன.

“என்னங்க இப்படி கேட்டுட்டீங்க? நம்ம மாரி யம்மாவுக்குத் தெரியுங்க. ஆத்தா கோயில்லத்தான் நான் கட்டினேன். நம்ம தோட்டத்திலே எல்லோருக்கும் வெத்திலை பாக்கு வச்சேங்க!” என்று பதில் சொல்கிறார் சுப்பையா.

“ஓகோ அப்படியா! நீங்க ரெஜிஸ்டர் பண்ணலையா?”

அரசு தரப்பு கேள்வி.

“அதெல்லாம் இப்ப வந்ததுதானுங்களே. அந்தக் காலத்துலே அதெல்லாம் ஏதுங்க?” என்று பதில் கூறுகிறார் சுப்பையா.

“சரியப்பா, உன்னுடைய முதல் பிள்ளையும், மூன்றாம் பிள்ளையும் இலங்கையில் பிறந்தாங்கன்னு புரூவ் பண்ணறே. இரண்டாவது பிள்ளைக்கு ‘புரூவ்’ இல்லையே?” பெரியதோர் உண்மையைக்கண்டு பிடித்தார் உதவி விசாரணையாளர்.

“இது அநியாயமுங்க. எம் மவன் கந்தையா பொறந்த அன்னிக்கே தோட்டத்து டாக்டரய்யாகிட்டே சொன்னேனுங்களே” பரிதாபமாகக் கூறினார் நாயக்கர்.

“நமக்கு அதெல்லாம் தெரியாது. உனக்குப் பிரசா உரிமைதரத் தகுந்த புரூவ் இல்லை” என்று ஒரே அடியாகக் கூறி, நாயக்கரை வெளியே செல்லுமாறு பணித்தார் உதவி கமிஷனர்.

பிறகு ஐந்நூறு ரூபாய் ஒழுங்கு பண்ணி, அய்யா விடம் கொடுத்து சரி பண்ணி விடலாம் என்று அய்யாவின் கார்ச் சாரதியிடம் ஒரு மாதிரி காசைப் புரட்டிக்கொடுக்கிறார் சுப்பையா.

இப்போது தனக்கு வந்த கடிதத்துடன் கண்டியில் கமிஷனரின் அறைக்குள் உடம்பெல்லாம் நடுங்கிய நிலையில் போகிறார் சுப்பையா நாயக்கர்.

“நமஸ்காரம், நீ எந்தத் தோட்டம்?” - அதிகாரத் தோடு கேட்டார் கமிஷனர்.

“நான் பறங்கிமலைத் தோட்டங்கையா...” - பணிவோடு பதில் கூறினார் நாயக்கர்.

“ஓ...யெஸ் குட் ஓம் பேரு?”

“எம் பேரு சுப்பையா நாயக்கர். அவ பேரு மீனாட்சிங்க.”

“இன்னொருமுறை திருப்பிச் சொல்லு ஓம் பேரு?”

“சுப்பையா நாயக்கர் தாங்க.”

“அப்படியா இன்னிக்கு நாங்க கூப்பிட்டது பறங்கிமலை சுப்பையா எட் கங்காணிதானே? அவன் சம்சாரம் பேரு தெய்வானை.”

“ஐயா எனக்குத் தாங்க வரச்சொல்லி கடுதாசி வந்துச்சு.”

“சுப்பையா கோவிக்கவேணாம். இது நம்ப கிளாக்கர் செய்த குத்தம். ஒனக்குப் பிரசா உரிமை இல்லைன்னு அனுப்பிட்டான். அவங்க கடுதாசி ஒனக்கு வந்தது. கோபிச்சுக்க வேணாம். நீங்க போகலாம்” என்று அரைகுறைத் தமிழில் கூறிய கமிஷனர், கோபமாக மேசை மணியைத்தட்டிச் சேவகனை அழைத்தார்.

அலுவலகத்தினின்றும் தள்ளாடித் தள்ளாடி வெளியில் வந்த நாயக்கர் ஒரு மரத்தடியில் தம்மையும் மறந்து இருந்துவிட்டார்.

சுப்பையா நாயக்கரின் கனவுகள் சிதறி நொறுங்குவதை தத்ரூபமாகச் சித்திரிக்கிறார் திருச்செந்தூரன்.

தலதா மாளிகை நெருங்க நெருங்க, நடுப்பகல் பூசையின் மணியோசை டாங்.. டாங்.. என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் “உரிமை எங்கே? உரிமை எங்கே?” என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பதுபோல இருந்தது என்று, கதைக்கு முத்தாய்ப்பு வைக்கிறார் திருச்செந்தூரன்.

# ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையாகும் இலங்கை பிரஜைகள் தாயகம் வர முடியுமா?

-ரஞ்சன் அருண் பிரசாத்



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படு கொலை வழக்கில் தண்டனை அனுப வித்து வந்த 6 பேரையும் விடுதலை செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப் பளித்திருக்கிறது. அந்த ஆறு பேரில் நால்வர் இலங்கை பிரஜைகள்.

நளினியின் கணவரான முருகன் என்றழைக்கப்படும் சிறிஹரன், சாந்தன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்.

இவர்களில் சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் இலங்கை கடவுச்சீட்டை கொண்டவர்கள்.

ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோர் 1990ம் ஆண்டு தமிழகத் திற்கு பயணித்து, அங்கு அகதி அந்த ஸ்த்தை கொண்டவர்கள்.

இவ்வாறு இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த நான்கு இலங் கையர்களுக்கும் இலங்கைக்கு வருகைத் தர சந்தர்ப்பம் உள்ளதாக என்பது தற்போது கேள்விகுரியதாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப் பிற்கு இலங்கையில் தொடர்ந்து தடை அமலில் உள்ள நிலையில், விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவம் தொடர்



பில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுவித்து விடுதலையான இலங்கை பிரஜைகளால் நாட்டிற்கு மீள வர முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

**இலங்கைக்கு வர முடியுமா?**

ஒருவேளை இலங்கைக்கு வருகை தரும் இவர்களை, விடுதலைப் புலிக ளாக கருதி இலங்கை அரசாங்கம் அவர் களை மீள கைது செய்ய முடியுமா?

இந்த வழக்கில் விடுதலை செய்யப் பட்ட இலங்கையர்கள், மீண்டும் நாட் டிற்கு வருகை தர சந்தர்ப்பம் உள்ளதா? என்பது குறித்து சட்ட நிபுணர்கள் சில ரிடம் வினவியபோது:

இவ்வாறு எழுந்த கேள்விகளை, இலங்கையின் பிரபல ஜனாதிபதி சட் டத்தரணி யூ.ஆர்.டி.சில்வாவிடம் வின வியபோது,

"அவர்களுக்கு இலங்கைக்கு வருகைத் தருவதில் எந்தவித பிரச்சினையும் கிடையாது. அவர்களுக்கு கடவுச்சீட்டு உள்ளது என்றால், அவர்களுக்கு விசா உள்ளது என்றால், நிச்சயமாக நாட் டிற்கு வருகை தர முடியும். எனினும், ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் இவர்களின் பெயர்கள் சந்தேக நபர்க ளின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட் டிருக்கும் பட்சத்தில், அவர்களை கைது செய்ய முடியும்," என்கிறார் சில்வா.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுத லையாகியுள்ளவர்களை மீள அதே குற்றச்சாட்டு தொடர் பில் கைது செய்ய முடியுமா? என ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வாவிடம் நாம் வினவினோம்.

"அந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்ய முடியாது. இலங்கைக்குள் ஏதேனும் குற்றம் செய்திருக்க வேண்டும். உதாரணமாக விடுதலைப் புலிகளின் செயற் பாடுகளுக்கு நிதி வழங்கியி ருந்தால், அல்லது வேறு வித மான ஒத்துழைப்புக்களை வழங்கியி ருந்தால், அவர்களை கைது செய்ய முடியும்" என அவர் பதிலளித்தார்.

**மனித உரிமைகள் ஆணையக்குழு என்ன சொல்கிறது?**

இதே கேள்விகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவாவிடம் நாம் வினவி னோம்.

"அவர்களுக்கு இலங்கைக்கு வருகைத் தர முடியும். விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் தொடர்ந்தும் தடை காணப்படு கின்றது. இவர்கள் உறுப்பினர்கள் என்றால், விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெயர்களும் கறுப்பு பட்டியலுக் குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

இவர்கள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற சந்தேக நபர் கள் மாத்திரமே. எனினும், அவர் கள் விடுதலைப் புலிகள் என்ற பெயர் அவர்கள் மீது பொறிக்கப் படவில்லை.

வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்படுகின்றார்கள் என்றால், அவர்களுக்கு தண்டனை இல்லாது செய்தே, விடுதலை செய் யப்பட்டார்கள். அப்படி என்றால், அவர்களுக்கு அடிப்படை உரிமை உள்ளது. இலங்கை பிரஜையொ ருவருக்கு எந்தவொரு நேரத்திலும் இலங்கைக்கு வருகைத் தர முடியும்.

எந்தவொரு நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறவும் முடியும் என ஆட்டிக்கல் 14ல், இறுதி யாக கூறப்பட்டுள்ளது. வேறு குற்றங்களை செய்திருந்தால், கைது செய்யப்படலாம்.

ஆனால், வேறு குற்றங்கள் கிடையாது. அப்படி என் றால், கைது செய்ய முடியாது" என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவா தெரிவிக்கின்றார்.

இதேவேளை, குறித்த நான்கு பேரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என உறுதிப் படுத்தப்படும் பட்சத்தில், அது அவர்களுக்கு பிரச்சினையாக உருவாகலாம் என மூத்த சட்டத்தரணி இளையதம்பி தம்பையா தெரிவிக்கின் றார்.


**சந்தேகம் எழுப்பும் வழக்கறிஞர்**

"விடுதலைப் புலி உறுப்பினர்களாக இருந்து, அவர்கள் இந்த தாக்குதலை நடத்த உதவி செய்துள்ளார்கள் என



குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டி ருந்தால், அவர்களுக்கு பிரச்சினை உள்ளது. விடுதலைப் புலிகள் தடை விதிக்கப்பட்ட அமைப்பு.

இலங்கை அரசாங்கம் தடையை நீக்க வேண்டும். தடை செய்யப்பட்ட



சிலரின் பெயர்களை, தடை பட்டியலி லிருந்து இலங்கை நீக்கியுள்ளது. இவர் கள் மீது தடை இருந்தால், அந்த தடையை நீக்க வேண்டும். இந்தியா விலும் அவர்களுக்கு பிரச்சினை உள்ளது.

அவர்களை முகாம்களுக்கே அனுப்பு வார்கள். அவர்களை இந்தியாவில் நடமாட விடமாட்டார்கள். சொந்த நாட்டு பிரஜைகள் இல்லா தமையினால், அவர்களை முகாமிற்கே அனுப்புவார்கள்.


ஆனாலும், இந்தியா விஸா கொடுத்தால், அவர்களுக்கு அங்கு இருக்க முடியும். நாடு கடத்தினாலும், இலங்கை ஏற்குமா என்ற கேள்வி இருக்கின்றது. எங்களுக்கு இலங்கைக்கு போக முடியாது, தங்குமிட விசாவை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்க முடியும்.


அதற்கு மறுப்பு தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்த நாட்டு நீதிமன்றத்தை நாட முடியும். இவர்களை வருகைத் தர இலங்கை அனுமதி வழங்கினால், பிரச் சினை கிடையாது" என மூத்த சட்டத் தரணி இளையதம்பி தம்பையா குறிப் பிடுகின்றார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 * 4 ⌗ 3 = 15 இங்கு * ⌗ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1 38. 2 39. 1 40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**14.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**14.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இணைந்த வடக்கு- கிழக்கில் சமஷ்டி; ஐக்கிய சமதான கூட்டமைப்பு வரவேற்பு

## ஹசன் அலி தெரிவிப்பு



நிந்தவூர், நவ. 14

“வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுத்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாட்கள் செயல்முனைவின் இறுதியில், ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்குள் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு கோரிக்கை பிரகடனப்படுத்தப்பட்டு அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் பாராட்டுகின்றோம்”

இவ்வாறு, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹஸன் அலி கூறினார்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கிராமிய அமைப்பாளர்களுக்கான செயலமர்வு ஒன்று கல்முனையில் நடைபெற்றது. இதில், பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “தமிழ் பேசும் மக்களுக்கான நிலைபேறான அரசியல் தீர்வுக்கான மேற்படி பிரகடனத்தில் வடக்கு - கிழக்குவாழ் முஸ் லிம்கள் தொடர்பிலும் பேசப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்த அடிப்படையில் முஸ்லிம்களுக்கான தீர்வை யார் முன்வைப்பது என்ற கேள்வி எழுந்துள்ள போதும் மறைந்த மாமனிதர் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் இதற்கான திடமான தீர்வை எமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

அவர் முன்வைத்த கரையோர மாவட்டம், தென்கிழக்கு அலகு, பாண்டிச்சேரி ஆட்சி முறையிலான ஆட்சி என்பவற்றை எமது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு வலியுறுத்துவதுடன், அதற்கான அழுத்தங்களையும் தொடரவுள்ளது.

இந்த நிலையில் கடந்த 22 வருட காலமாக, தலைவரின் மறைவுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிவரும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் தலைவர்கூட கரையோர மாவட்டம் பற்றியோ, தலைவர் அஷ்ரப்பின் குறித்த தென்கிழக்கு அலகு பற்றியோ வாய் திறந்ததாக இல்லை. தலைவர் அஷ்ரப் உருவாக்கிய கட்சியின் அடிப்படைக் கொள்கைகள், அவர் மறைந்த 22 வருட காலத்தில் முற்றாக மாற்றப்பட்டுள்ளது.

மன்னிப்பு என்ற போர்வையில் விவஸ்தையற்ற விழுமியங்கள் இன்று முஸ்லிம் காங்கிரஸை ஆட்கொண்டுள்ளது. தனிநபர் தீர்வு கட்சியின் சமூக அரசியலை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. முஸ்லிம்கள் செறிந்தும் பெரும்பான்மையாகவும், பன்னெடுங்காலமாக வாழ்ந்து வரும் நமது கரையோர மாவட்டத்தில் நமது இருப்பு, தனித்துவ அடையாளம், நிலவுரிமை அந்தஸ்துபோன்ற சுய கௌரவ விழுமியங்கள் இன்று பெரும் தேசிய அரசியல் மாயைக்குள் சிக்குண்டு கரைந்து வேறும் கானல் நீராகிப் போய்விட்டன.

நாடளாவிய ரீதியில் பரந்து வாழும் முஸ்லிம்களின் தனித்தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அன்று தலைவர் அஷ்ரப் தொடங்கிவைத்த பணியை அவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடரும் புதிய பயணத்தையே நாம் ஆரம்பித்துள்ளோம். தலைவர் அஷ்ரபின் மரணத்தின் பின் கடந்த 22 வருடங்களில் கிழக்கு முஸ்லிம்கள் இழந்த கௌரவம் மற்றும் இழந்த தனித்தேசியத்தை மீளப் பெறப்பாடுபடுவோம். கிழக்கு முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக முஸ்லிம் தேசிய இனமாக உருவானால் மட்டுமே பலமாகவும், ஏன் கிழக்கிற்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்கும் பலமாக அமையும், இதற்காகப் போராட வேண்டிய கட்டம் உருவாகியுள்ளது” என்றார். (ஐ-06)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# பொலிஸ் பரிசோதகர் மீதான விசாரணை மீள ஒத்திவைப்பு!



கல்முனை, நவ. 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பில் கைதான பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் 05 திகதி வரை மறுவிசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜெயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு கடந்த கடந்த வெள்ளிக்கிழமை வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது மன்றில் பிரதான பரிசோதகரின் கைது தொடர்பில் ஆட்சேபனை எழுப்பி நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்ததுடன் பிரதிவாதியான பொலிஸ் பரிசோதகரை வழக்கில் இருந்து பிணையில் விடுவிக்குமாறும் சட்டத்தரணிகள் விண்ணப்பங்களை முன்வைத்தனர்.

சட்ட மா அதிபர் திணைக்களம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு இதுவரை இறுதி முடிவை எடுக்கவில்லை என்பதனாலும் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் விசேட சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்காகவும் இவ் வழக்கு தொடர்பாக குறுகிய கால அவகாசம் மன்றில் கோரப்பட்டது.

மேலும் சந்தேக நபரின் பிணை விண்ணப்பம் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் அடுத்த தவணையின் போது சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் நெறிப்படுத்தி இருந்தார்.

அத்துடன், இந்த வழக்கை கல்முனை மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்துவதா அல்லது வேறு நீதி மன்றத்திற்கு மாற்றும் செய்வதா என்பது தொடர்பில் விரைவான ஒரு தீர்மானத்தை சட்ட மா அதிபர் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும் என மேல் நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

அத்துடன், வழக்கும் மறுதவணைக்காக டிசெம்பர் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேசமயம், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் தேடப்பட்ட நிலையில், சாய்ந்தமருதில் வீடு ஒன்றில் தற்கொலை குண்டுதாக்கதல் நடந்தது. இது தொடர்பில், பிரதான பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். 2019.04.26 அன்று நடந்த இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகளை மறைத்தார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

# வெளிநாடு அனுப்புவதாக மோசடி திருமலையில் ஒருவர் கைதானார்

திருகோணமலை, நவ. 14

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக தெரிவித்து 77 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நிலாவெளியை சேர்ந்த 33 வயதான ஒருவரே இதில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் சிக்கியிருப்பின், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் மக்களை கேட்டுள்ளனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருள் முகவர் ஒருவர் கைது!

வாழைச்சேனை, நவ. 14

ஐஸ் போதைப்பொருளை விநியோகம் செய்யும் முகவர் ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு- வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வாழைச்சேனை புகையிரத நிலைய வீதிக்கு அருகில் வைத்து சந்தேக நபர் விசேட அதிர டிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைது செய்யப்பட்டாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைதான நபர் பிறைந்துறைச்சேனையை சேர்ந்த 18 வயது நபர் என்பதுடன், அவரிடமிருந்து 6 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேக நபர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# சவூதியில் மரணித்தவரின் உடல் குடும்பத்தவரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு, நவ. 14

சவூதி - தமாம் பகுதியில் மரணமடைந்த இலங்கையரின் உடல் கடந்த வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடைந்தது.

மட்டக்களப்பு - வந்தாறுமூலை பகுதியைச் சேர்ந்த தம்பிஐயா தவராசா எனும் 64 வயது என்பவரின் சடலமே இவ்வாறு நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது வருடங்களாக வெளிநாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில், 20 நாட்களுக்கு முன்னர் அவர் சவூதி - தமாம் பகுதியில் மரணமானார்.

மரணமடைந்தவரின் உடல் குடும்பத்தாரின் வேண்டுகோளுக்கமைய கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கல்குடா ஜனாஸா நலன்புரி மற்றும் சமூக சேவை அமைப்பின் வாகன சேவை ஊடாக குடும்பதாரிடம் ஒப்படைக்கப்பட்டது.(ஐ)

# போலி எம். பியின் பெயரில் திருமலையில் பணமோசடி!

கொழும்பு, நவ. 14


பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஊழியர்களாகக் காட்டி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் மூன்று பேர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ பொலிஸ் மா அதிபரின் உதவியை நாடியுள்ளார்.

சந்தேகநபர்கள் மூவரும் திருகோணமலை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வேலை செய்கின்றனர் என்றுகூறி அடையாள அட்டைகளை தயாரித்துள்ளனர். அந்த எம்.பியின் பெயர் டி. எம். ஷெரீப் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அப்படி ஓர் எம்.பி இல்லை.

மூன்று பேரும் தங்களை ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைப்பு செயலாளர் மற்றும் தனிப்பட்ட தொடர்பு அதிகாரியாக குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் கொரியாவுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்பும் மோசடியில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. (ஐ)

## சாகச விமானங்கள் மோதிய விபத்தில் 6 பேர் உயிரிழப்பு!



நியூயோர்க், நவ. 14

அமெரிக்காவில் 2 ஆம் உலக போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சியில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் டல்லாஸ் நகரில் விமானப்படை சார்பில் 2ஆம் உலக போர் காலத்தின் விமானங்கள் அடங்கிய சாகச நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதில் பங்கேற்ற, பெரிய ரக போயிங் பி-17 குண்டுகள் வீசும் விமானம் மற்றும் ஒரு சிறிய ரக பெல் பி-63 கிங் கோப்ரா என்ற விமானமும் விண்ணில் பறந்து சென்றன.

இந்த இரு விமானங்களும் நடுவானில் திடீரென மோதி விபத்தில் சிக்கின. இந்த சம்பவத்தில் நேராக முன்னோக்கி சென்ற போயிங் விமானத்தின் மீது அதன் இடதுபுறத்தில் சென்று சிறிய விமானம் மோதியுள்ளது.

இரண்டு விமானங்களும் விபத்தில் துண்டுகளாக உடைந்து சிதறின. தொடர்ந்து தரையில் விழுந்து தீப்பிடித்து எரிந்தன. இதனைப் பார்த்த பலர் அதிர்ச்சியில் உறைந்தனர்.

இந்நிலையில், அந்த விமானங்களில் சாகசத்தில் ஈடுபடுவதற்காகப் பறந்த 6 பேர் உயிரிழந்தனர். (ஐ)

## உலகின் பொருளாதாரம் இரண்டாக பிரியக்கூடாது

### ஐ. நா. பொதுச் செயலர் அறிவுறுத்து

அமெரிக்கா மற்றும் சீனா பெயரில் உலக பொருளாதாரம் இரண்டாக பிரிக்கப்படக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் கூறியுள்ளார்.

கம்போடியா நாட்டின் நாம்பென் நகரில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாம் எந்த விலை கொடுத்தேனும் உலக பொருளாதாரம் இரண்டாக பிரிந்துவிடாமல் அதனை தவிர்க்க முயலவேண்டும். பெரிய அளவில் பொருளாதாரங்களை வழிநடத்தி செல்லும் அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் பெயரால் அவை இரண்டாக பிரிக்கப்படகூடாது என கூறியுள்ளார்.

இரு வெவ்வேறு விதிகள், இரு ஆதிக்க நாணயங்கள், இரண்டு இணையதளங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவில் மோதி கொள்ளும் இரண்டு செயல்திட்டங்கள் ஆகியன, திடீர், திடீரென சவால்களை சந்தித்து கொண்டிருக்கும் உலகத்தின் திறனை குழிதோண்டி புதைத்து விடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவின் வணிக ரீதியிலான ஆயுதங்களில் ஒன்றான பொருளாதார தடையை சீனாமீது விதித்த மைக்கு பதிலடியாக, அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தி சார்ந்த பொருட்களின் இறக்குமதிக்கு சீனாவும் பொருளாதார தடை விதித்தது. இந்த இரு நாடுகளின் வர்த்தக மோதலால் உலக பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளானது.




கொரோனா பெருந்தொற்றில் கடந்த 2 ஆண்டுகளாக உலகம் சிக்கி தவித்து வரும் சூழலில், மீண்டும் அதுபோன்றதொரு சூழல் ஏற்பட்டு விட கூடாது . இந்த பிரிவை இணைக்கும் பாலம் போன்று ஆசிய நாடுகள் அமைந்துள்ளன என கூறியதுடன், அனைவருக்கும் கிடைக்கும் வகையிலான ஒரே உலகளாவிய பொருளாதாரம் மற்றும் உலகளாவிய சந்தை என நாம் வைத்திருக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ரஷ்யப் படைகளிடமிருந்து கெர்சன் நகரம் மீட்கப்பட்டது!

### உக்ரைன் மக்கள் கொண்டாட்டம்

கீவ், நவ. 14

ரஷ்ய படைகளிடம் இருந்து கெர்சன் பகுதியை உக்ரைன் மீட்டுள்ளதையடுத்து அந் நாட்டு மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உக்ரைன்மீது கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைனின் கீவ் நகர் வரை வெகு வேகமாக முன்னேறிய ரஷ்ய படைகள் பின்னர் உக்ரைனின் பதிலடியால் பின்வாங்கின.

இதனிடையே, போர் மூலம் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட உக்ரைனின் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய நகரங்களை தங்கள் நாட்டுடன் ரஷ்யா இணைத்துக் கொண் டது.

இந்நிலையில், உக்ரைனின் கெர்சன் பகுதியில் உக்ரைன் படைகள் ஆதிக்கம் செலுத்தின. தொடர்ந்து, அங்கிருந்து ரஷ்யப் படைகளை திரும்புமாறு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் ஷொய்கோ உத்தரவிட்டார். இதன் தொடர்ச்சியாக, கெர்சன் நகரை உக்ரைன் மீட்டுவிட்டதாக உக்ரைன் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



கெர்சான் பகுதியை உக்ரைன் மீட்டதைத் தொடர்ந்து தெருக்களில் உக்ரைன் கொடி ஏற்றியும், அந்த நாட்டு தேசிய கீதத்தை இசைத்தும் மக்கள் தங்கள் கொண்டாட்டத்தை வெளிப்படுத்தினர்.

## ஆப்கானில் வறுமை தாங்காமல் குழந்தையை விற்க பெண் முயற்சி!

காபூல், நவ. 14

அதிக வறுமை காரணமாக தனது குழந்தையை விற்க முயன்ற ஆப்கானிஸ்தான் பெண் தொடர்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பால்க் மாகாணத்தில் உள்ள சில உள்ளூர் வாசிகள் அந்தக் குடும்பத்தின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த உணவு மற்றும் பிற உதவிகளை வழங்கிய பின்னர் இரண்டு வயது குழந்தை விற்கப்படாமல் காப்பாற்றப்பட்டது.

இதுகுறித்து குழந்தையின் தாய் கூறும் போது, "நான் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறேன். என்னிடம் சாப்பிட அல்லது எரிபொருளைப் பயன்படுத்த எதுவும் இல்லை. குளிர்காலத்தில் வீட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்க முடியவில்லை. கடுமையான வறுமையால் தனது குழந்தையை விற்க முயற்சி செய்தார் என்று அவர் கூறினார்.

மிகவும் மோசமான நிலையில் அந்த மாகாணத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் நிலைமை குறித்து அதிகாரிகளிடம் அப்பெண் கூறினார். உள்ளூர் அரசாங்கமோ அல்லது மனிதாபிமான அமைப்புகளோ தனக்கு ஒரு வருடத்துக்கும் மேலாக எந்த உதவியும் செய்யவில்லை என்று அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததில் இருந்து, அந்நாட்டில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்க வில்லை என்றும், கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## 800 கொரோனா தொற்றாளருடன் சிட்னியில் சொகுசுக் கப்பல்!

சிட்னி, நவ. 14

அவுஸ்திரேலியாவில் கடந்த ஒரு வார மாக ஒமைக்ரான் வகை கொரோனா தொற்று வேகமாகப் பரவி வருகிறது. இது 4ஆவது அலை என சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால் அவுஸ்திரேலிய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்நிலையில், கார்னிவல் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு சொந்தமான மெஜஸ்டிக் பிரின்சஸ் என்ற சொகுசுக் கப்பலில் பயணித்த 800 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அந்தக் கப்பல் சிட்னி அருகே நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்று பரவுவதைத் தடுக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை. கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் - என்று உள்துறை அமைச்சர் கிளாரி ஓ நீல் கூறியுள்ளார்.

## இரண்டரை ஆண்டு பயணத்தை முடித்து பூமி திரும்பிய விமானம்!

வாஷிங்டன், நவ. 14

அமெரிக்காவின் ஆளில்லா விண்வெளி விமானம் இரண்டரை ஆண்டு கால பயணம் முடிந்து வெற்றியுடன் பூமிக்கு திரும்பி சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவின் ஆளில்லா விண்வெளி விமானம் ஒன்று 6ஆவது முறையாக விண்ணில் செலுத்தப்பட்டு ஏறக்குறைய 908 நாட்கள் பயணம் முடிந்து வெற்றியுடன் பூமிக்கு திரும்பியுள்ளது.

இதுபற்றி போயிங் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்களது போயிங் நிறுவனம் தயாரிப்பில் உருவான எக்ஸ்-37பி சுற்று வட்டப்பாதை சோதனை வாகனம் (ஓ.டி.வி.) விண்வெளியில் புதிய சாதனை பதிவாக, 908 நாட்கள் தனது சுற்று வட்டப்பாதையில் பயணித்து விட்டு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள நாசா விண்வெளி அமைப்பின் கென்னடி விண்வெளி தளத்தில் தரையிறங்கி உள்ளது.

இதற்கு முன்பு சுற்று வட்டப்பாதையில் 780 நாட்கள் பயணித்திருந்தது. தனது முந்தைய சாதனையை தற்போது முறியடித்துள்ளது.

சூரிய சக்தியால் இயங்க கூடிய இந்த விண்கலம் 9 மீற்றர் (29 அடி) நீளம் கொண்டது. தனது முந்தைய 5 பயணங்களில் சுற்று வட்டப்பாதையில் 224 நாட்கள் முதல் 780 நாட்கள் வரை பயணம் செய்துள்ளது. இதன்படி, மீண்டும் பயன்பட கூடிய திறன் பெற்ற இந்த



விண்கலம், 6-வது முறையாக பயணம் மேற்கொண்டு அதனை வெற்றியுடன் முடித்துள்ளது. இதுவரை மொத்தம் 3,774 நாட்கள் விண்வெளியில் செலவிட்டு உள்ளது. 130 கோடி மைல்கள் தொலைவுக்கு விண்வெளியில் பறந்து சென்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இருபது - 20 உலகக் கிண்ணத்தை மீண்டும் வென்றது இங்கிலாந்து!

மெல்பர்ன், நவ. 14

பாகிஸ்தான் அணியை 5 விக்கெட்களால் வீழ்த்தி இருபது - 20 உலகக் கிண்ணத்தை இரண்டாவது தடவையாக வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் நேற்று பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர், பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு முஹமத் ரிஸ்வான், பாபர் அசாம் இணை தொடக்கம் கொடுத்தது. 4 ஓவர் வரை தாக்குப் பிடித்த இந்த இணையை, சாம் கரன் பிரித்து ரிஸ்வானை போல்ட் அவுட் ஆக்கி வெளியேற்றினார்.

15 ஓட்டங்களில் அவர் நடையைக்கட்ட, முஹமத் ஹரிஸ் களத்துக்கு வந்து சேர்ந்தார். நிலையான ஆட்டத்தைக் கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கும் பலம் சேர்ப்பார் என எதிர்பார்த்திருந்த பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாமை 32 ஓட்டங்களில் பெவிலியனுக்கு அனுப்பிவைத்தார் அடில் ரஷித்.

இப்திகார் அஹமத்(0), முஹமத் ஹரிஸ் (8) பெரிய அளவில் சோபிக்காமல் விக்கெட்டாக, 15 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்களை சேர்ந்திருந்தது பாகிஸ்தான் அணி. இறுதியில் ஓட்டங்கள் குறைவாக இருந்ததால் துடுப்பாட்ட வீரர்களிடையே பதற்றம் நிலவியது. இந்நிலையில்அணிக்கு நம்பிக்கை கொடுத்த ஷோன் மசூத்தும் 38 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஷதாப் கானும் 20 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து ஓட்டங்களை கூட்ட சிக்ஸ் அடிக்க முயன்ற வீரர்கள் பிடிகொடுத் கொடுத்து ஆட்ட மிழந்து வெளியேறினர். பெரிய அளவில் நம்பிக்கை அளிக்காத துடுப்பாட்ட வீரர்களால் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் களை இழந்த பாகிஸ்தான் 137 ஓட்டங்களை சேர்த்தது.

இங்கிலாந்து அணி தரப்பில் சாம் கரன் 3 விக்கெட்களையும், அடில் ரஷீத், கிரிஷ் ஜோடன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், பென் ஸ்ரோக்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஜோஸ் பட்லர், அலெக்ஸ் ஹேல்ஸ் இணை தொடக்கம் கொடுத்தது. ஹேல்ஸை முதல் ஓவரிலேயே ஷஹின் அப்ரிடி 'போல்ட்' செய்து வெளியேற்றினார்.

3ஆவது ஓவரை வீசிய ஹாரீஸ் ரவூப், பீல் சால்டின் விக்கெட்டை சாய்க்க, ஆட்டம் சூடுபிடித்தது. 4 ஓவர் முடிவில் 2 விக்கெட்களை இழந்த இங்கிலாந்து 32 ஓட்டங்களை சேர்த்திருந்தது. இந்த இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பட்லர் இந்த போட்டியில் நிலைத்து ஆடுவார் என எதிர்பார்த்த நிலையில், பெரிய விக்கெட்டான அவரை ஹாரிஸ் ரவூப் இலகுவாக தூக்கியது பாகிஸ்தான் ரசிகர்களுக்கு நம்பிக்கை அளித்தது.

பவர் பிளே முடிவில் 49 ஓட்டங்களில் 3 விக்கெட்டை இழந்திருந்தது இங்கிலாந்து. ஒருபுறம் பென் ஸ்ரோக்ஸ் நிலைத்து ஆட மறுபுறம் சதாப் கான் வீசிய பந்தில் ஹாரி ப்ரூக் விக்கெட்டாகி வெளியேறினார். தொடர்ந்து மொயின் அலி - பென் ஸ்ரோக்ஸுடன் கைகோத்து இங்கிலாந்தின் ஓட்டங்களை உயர்த்தினர். மொயின் அலி 18ஆவது ஓவரில் வெளியேற, பென் ஸ்ரோக்ஸ் 49 பந்துகளில் 52 ஓட்டங்களை சேர்த்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அணியை வெற்றி பெறச்செய்தார்.

பாகிஸ்தான் அணி தரப்பில், ஹாரீஸ் ரவூப் 2 விக்கெட்களையும், ஷாயின் அப்ரீடி, ஷதாப் கான், முஹம்மத் வசீம் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதேவேளை, ஒருநாள் உலகக் கிண்ணமும் இங்கிாந்தின் வசமே உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளை வென்றார் சாம் கரன்!




மெல்பர்ன், நவ. 14

பாகிஸ்தானை வீழ்த்தி இங்கிலாந்து அணி 2ஆவது முறையாக உலகக் கிண்ண சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. அவுஸ்திரேலியாவில் கடந்த மாதம் தொடங்கிய 8ஆவது 20 ஓவர் உலகக் கிண்ணத் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்தப் போட்டியில் 4 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்களை கைப்பற்றிய சாம் கரன் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப் பட்டார். அதுமட்டுமின்றி இந்தத் தொடர் முழுவதும் சிறப் பாக பந்துவீசி 13 விக்கெட்களை வீழ்த்தி இருந்த சாம் கரன் "தொடர் நாயகன்" விருதையும் தட்டி சென்றார்.

முன்னதாக நடப்பு இருபது -20 உலகக் கிண்ணத்தில் சிறப்பாக விளையாடிய வீரர்கள் பட்டியல் ஒன்றை ஐ. சி. சி. வெளியிட்டு இருந்தது. ஐ. சி. சி. பரிந்துரைத்துள்ள வீரர்களில் யார் ரசிகர்களின் அதிக வாக்குகளை பெறுகிறார்களோ அந்த வீரர் ஐ. சி. சி. தொடர் நாயகன் விருது வெல்வார் என அறிவிக்கப் பட்டு இருந்தது.

அந்த வகையில் ஐ. சி. சி. தொடர்நாயகன் விருதுக்கு ஹசரங்க, விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், சதாப் கான், ஷாகின் ஆப்ரிடி, சாம் கரன, ஜாஸ் பட்லர், அலெக்ஸ் ஹேல்ஸ், சிக்கந்தர் ரஸா, ஆகியோர் பரிந்துரைக்கப் பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இறுதி போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இங்கிலாந்து அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்த சாம் கரனுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இன்றி உள்ளூராட்சி தேர்தலை நடத்தமுடியாது!

## தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, நவ. 14

உள்ளூராட்சி மன்ற தேர்தலை 2023 மார்ச் 20ஆம் திகதி நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புகள் கிடைக்காத நிலையில் தேர்தல் இலக்கை வெற்றிக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலை மார்ச் 20 ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் என்ற அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில் வெளியிட முடியும். ஆனால், தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு, அரச அதிகாரிகளை தேர்தல் பணிக்காக விடுவித்தல் மற்றும் எரிப்பொருள் பிரச்னைகளை தீர்த்



தல் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதா? இல்லையா? போன்ற பிரதானமான பிரச்னைகளுக்கு அரசாங்கம் உறுதியான தீர்வை வழங்காத நிலையில் தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும் 21 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் புதிய தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கும் வரை தற்போதைய தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இடைக்கால நிர்வாகியாக செயற்படும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. எனவே, இடைக்கால ஆணைக்குழு ஒன்றால் பிரதான பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முடியாது.

இதேவேளை, 8 ஆயிரம் கொண்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தொகையை திடீரென 4 ஆயிரமாக குறைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், அவ்வாறு குறைப்பது என்பது சாத்தியமற்றதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ள போதிலும் அதனை உத்தியோக பூர்வ அறிவிப்பாக வெளியிட்டு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறில்லாது தேர்தலை நடத்துவதற்கான நடைமுறை சிக்கல்கள் மேலும் தீவிரமடையும். எனவே தேர்தலை நடத்துவதற்கான உரிய திகதியை அறிவித்து அரசாங்கம் அதற்கான நடவடிக்கைளை முன்னெடுக்க ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# திலினி விவகாரம் ஞானசாரரிடம் விசாரணைகள்



கொழும்பு, நவ. 14

நிதி மோசடி தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக கலகொடை அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

அவரிடம் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு சென்றிருந்த அவர் பிற்பகல் 5.30 அளவில் அங்கிருந்து வெளியேறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பெருந்தோட்டத்துறை மக்களை நலிவுற்ற பிரிவாக அறிவியுங்கள்

## ஜனாதிபதியிடம் மனோ எம். பி. வலியுறுத்து

கொழும்பு, நவ. 14

பெருந்தோட்டத்துறையை நலிவுற்ற பிரிவாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

உலக வங்கியின் அறிக்கைக்கு அமைவாக இலங்கையின் தேசிய வறுமை மட்டம் 26 வீதமாக உயர்வடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்டத்துறையின் வறுமை நிலையானது 53 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், ஐ. நா. உலக உணவு திட்டத்தின் இலங்கை தொடர்பான அறிக்கையில் உணவின்மை நகர பகுதிகளில் 43 வீதமாகவும் கிராமிய பகுதிகளில் 34 வீதமாகவும் பெருந்தோட்ட பகுதிகளில் 51 வீதமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பெருந்தோட்டத்துறை மக்கள் வாழும் குடியிருப்புகளை நலிவுற்ற பிரிவாக அறிவித்து, அதற்கான விசேட ஒதுக்கீட்டு வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் மனோ கணேசன் எம். பி. ஜனாதிபதியை கோரியுள்ளார். (ஐ)

# யோசித ராஜபக்ஷ தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகின!

கொழும்பு, நவ. 14

யோசித ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிரதானியாக விளங்கிய யோசித ராஜபக்ஷ வெளிநாட்டு பயிற்சிக்காக எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்?, இலங்கை கடற்படையில் பணியாற்றியவேளை அவர் எவ்வாறு வெளிநாட்டு பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறித்தே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

வெளிநாட்டு பயிற்சிக்கு கடற்படையினரை தெரிவு செய்பவர்களை இலஞ்ச ஊழல் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு விசாரணை செய்யவுள்ளது. எனினும் இந்த விசாரணைகள் குறித்து அதிகாரிகள் மௌனம் காக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

யோசித ராஜபக்ஷ பிரிட்டிஸ் கடற்படையின் டார்ட்மவுத்தில் பயிற்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மனைவியுடன் இருந்தவரை அடித்துக் கொன்ற கணவன்!

இரத்தினபுரி, நவ. 14

தனது மனைவியுடன் உறங்கிக் கொண்டிருந்தார் என்று கூறி இளைஞர் ஒருவரை பிடித்து மரத்தில் கட்டிவைத்து தாக்கியதில் அந்த இளைஞர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இரத்தினபுரி, ஹிதெல்லன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

குருவிட்ட பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் திருமணமான பெண்ணுடன் தவறான உறவை கொண்டிருந்தார் என்றும், சனிக்கிழமை அவரின் வீட்டுக்கு சென்றவர் உணவருந்திவிட்டு அவருடன் உறங்கியுள்ளார்.

இந்நிலையில், அந்தப் பெண்ணின் கணவர் வீடு திரும்பியுள்ளார். அங்கு இருவரையும் பிடித்த அவர் இளைஞனை தாக்கியதுடன், மரத்துடன் கட்டிவைத்து அடித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞரை மீட்ட பொலிஸார் அவரை மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் 37 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# விருந்தில் பங்கேற்றவர் நீரில் மூழ்கி மரணம்!

கொழும்பு, நவ. 14

ஹோட்டலில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில் பங்கேற்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - கல்கிசையில் இடம்பெற்றுள்ள இந்த சம்பவத்தில் மொறட்டுவையை சேர்ந்த 24 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவர் மதுபானம் அருந்திய நிலையில், ஹோட்டலிலிருந்த நீச்சல் தடாகத்தில் நீராடியுள்ளார் என்றும் இதன் போதே நீரில் மூழ்கி உயிரழந்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடனடியாக மீட்கப்பட்ட இளைஞர் மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# அமைதி பாதயாத்திரைக்கு பொலிஸார் நேற்று இடையூறு



கொழும்பு, நவ. 14

கொழும்பு நோக்கி அமைதியான முறையில் பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ள இரு பெண்களுக்கு பொலிஸாரால் நேற்றும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு - மொறட்டுவையை இவர்கள் அடைந்தனர். நேற்றுக் காலை அங்கிருந்து தமது பாதயாத்திரையை தொடங்கியபோதே பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் அங்குப் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதேசமயம், நேற்று முன்தினம் இந்த இரு பெண்களுக்கும் களுத்துறையிலும் பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## தமிழர்...

முன்னெடுப்பதற்காக விடுக்கப்பட்ட அழைப்பு நடைமுறையில் சாத்தியப் பட வேண்டும்.

அதேநேரம், இனப்பிரச்னை உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாசைகள் சம்பந்தமான பேச்சுகள் முன்னெடுகின்ற போது கிழக்கு மாகாணத்தைப் புறக் கணிக்க முடியாது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு உறுப்பினர்களுடன் சந்திக்கும் அதேநேரம் கிழக்கு உறுப்பினர்களின் பிரசன்னம் அவசியமாகின்றது. வடக்கை தனியாகவும் கிழக்கைத் தனியாகவும் பார்க்கமுடியாது.

அதேநேரம், தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக இருந்தால் அது இணைந்த வடக்கு - கிழக்கிலேயே அமைய வேண்டும் என்பது எமது நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. அவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு உறுப்பினர்களுடனான பேச்சுகளின் போது கிழக்கு உறுப்பினர்களையும் உள்ளீர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

இதனால் ஜனாதிபதியைச் சந்தித்து நேரில் கோரிக்கை விடுப்பதென தீர்மானித்துள்ளோம். பெரும்பாலும் இந்தச் சந்திப்பானது அடுத்த பாராளுமன்ற அமர்வில் இடைப்பட்ட நேரத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

## ஜனாதிபதியின்...

இரா. சம்பந்தன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்களுடன் பேசுவது என்றால் முக்கியமாக புதிய அரசமைப்பு தொடர்பில் தான் அந்தப் பேச்சு அமைய வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு புதிய அரசமைப்பு ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக எமது நிலைப்பாட்டை விளக்கி நாம் எழுத்து வடிவிலான கோரிக்கைகளை ஏற்கனவே அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளோம். அந்தக் கோரிக்கைகள் மிகவும் விவரமானவை. ஆனால், அதன் அடிப்படையில் ஒன்றும் நடைபெறவில்லை. ஆட்சிகள் மட்டும் மாறியிருக்கின்றன. ஒவ்வோர் ஆட்சியிலும் தாங்கள் அதைச் செய்வோம் - இதைச் செய்வோம் என்று அரச தரப்பினர் சொல்லியிருக்கிறார்கள் ஆனால், அவர்கள் எதையும் செய்யவில்லை.

இதுவிடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு வித்தியாசமாக - நம்பிக்கைக்குரியதாக - முன்னேற்றம் காணக்கூடிய வகையில் கையாளப்படுமாக இருந்தால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் எங்களால் இயன்ற ஒத்துழைப்பை நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழங்குவோம் - என்றும் கூறினார். (ஐ)

## மக்களின்...

விருத்திக்கான மூலோபாய திட்டம் கொள்கை பிரகடன புத்தக வெளியீடு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த குழுவொன்று தங்களின் மனசாட்சிக்கு இனங்க, அரசியல், பொருளாதார, சமூக கொள்கை அடங்கிய புதிய வேலைத்திட்டம் ஒன்றை பிரகடனப்படுத்தி இருக்கின்றது. இதற்காக எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இவர்களின் இந்த வேலைத்திட்டத்தை வரவேற்கின்றோம். நாட்டை கட்டியெழுப்ப இணைந்து செயல்படுவதற்கான முயற்சியாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம். இந்த பயணத்தின் வெற்றி மற்றும் தோல்வியை மக்களே தீர்மானிப்பார்கள்.

அதனால் அடுத்துவரும் தேர்தலில் நாங்கள் எவ்வாறு இணைந்துபோட்டியிடுவது தொடர்பில் எங்களுக்கு கலந்துரையாட முடியும். என்றாலும் மக்கள் எதிர்பார்க்கும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும். அது மக்களின் உரிமை. அதனால் அரசாங்கம் உரிய காலத்தில் தேர்தலை நடத்தும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## கட்சிவேறுபாடு...

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே தமிழ்த் தேசிய பிரச்னைக்கான தீர்வு என்பதை, வட, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றாக வலியுறுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று எழுந்துள்ளது.

எமது கட்சிகளுக்கு இடையில் பல்வேறு பேதங்கள் இருந்தாலும் எமது மக்களின் அடிப்படை அபிலாசையை வெளிப்படுத்த வேண்டிய இந்த வேளையில் கட்சி வேறுபாடுகளை புறம்வைத்துவிட்டு அதனை உரத்துக்கூற அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

இதற்காக நாளை செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் ஒன்று கூடுமாறு கட்சித் தலைவர்களை அன்போடு அழைக்கிறோம். காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு நீங்கள் சமுகம் தருவீர்கள் என்று நம்புகிறோம் - என்றுள்ளது.

## திருமலையில்...

ஐ. ஓ. சி. இணைந்து நடத்தும் ட்ரிங்கோ பெற்றோலியம் ரேர்மினல் லிமிட்ரெட் நிறுவனத்தில் 51 சதவீத பங்குகள் இந்திய நிறுவனத்துக்கு உரியதாகும்.

திருகோணமலை துறைமுகத்தில் உள்ள இரண்டாம் போர் காலத்தில் அமைக்கப்பட்ட 51 எண்ணெய் குதங்களை இந்த நிறுவனம் கட்டுப்படுத்துகிறது. இந்த எண்ணெய் குதங்களை விரைவாக திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், 10 எண்ணெய் குதங்களை 2 கோடி அமெரிக் டொலர் செலவில் உடனடியாக திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதேபோல, மீதமுள்ள எண்ணெய் குதங்களை 5 கோடி டொலர் செலவில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐஸ் போதை...

மேலும் இறுக்கமாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன்படியே புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

ஐஸ் போதைக்கு அடிமையானவர்கள் கடுமையான மனநோயாளிகளாக மாறியுள்ளனர் என்று விசேட மனநல மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐஸ், ஹெரோயின் என பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது என்று போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் தகவல் தெரிவிக்கின்றது.

# முள்ளியவளை துயிலும் இல்லத்தில் சிரமதானம் செய்தோர்மீது விசாரணை

முல்லைத்தீவு, நவ. 14

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானப் பணிகளை மேற்கொள்ள முயன்றவர்களை படைமுகாமுக்கு அழைத்த படையினர் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை துயிலும் இல்ல வளாகத்தில் அமைந்துள்ள 592 ஆவது படையணி இராணுவத்தினரே இவ்வாறு விசாரணை நடத்தியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் விஜிந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான அமலன் , ஜெகன் ஆகியோரும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இணைந்து முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, அங்கு வந்த படையினர் அவர்களை முகாமுக்கு வருமாறு அழைத்துள்ளனர். அங்கு சென்ற அவர்களை 592ஆவது படையணி முகாமின் அதிகாரி மாவீரர் நாளை இப்பகுதியில் அனுஷ்டிக்க முடியாது என எச்சரித்தார். அத்துடன், இந்தப் பகுதி முழுவதும் இராணுவத்துக்கு சொந்தமான பகுதி. நீங்கள் துப்புரவு செய்யலாம் ஆனால், 27ஆம் திகதி சுடர் ஏற்ற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைக்கு சொந்தமான பகுதியையே துப்புரவு செய்துள்ளோம். இறந்த எமது உறவுகளை நினைவு தடை எதுவும் இல்லை என அரசாங்கம் கூறியுள்ள போதிலும் இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொள்கின்கிறீர்கள். நாங்கள் அஞ்சலிப்பதை தடுக்க வேண்டாம் என்று இதன்போது அரசியல் வாதிகளும் பொதுமக்களும் தெரிவித்தனர். (ஐ)


# பெருந்தொகை பப்பாசி மரங்கள் காட்டுயானைகளால் அழிப்பு!

வவனியா, நவ. 14

வவுனியா நெடுங்கேணியில் பெருந்தொகையான பப்பாசி மற்றும் தென்னை மரங்களை யானைகள் அழித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி புளியங்குளம் பிரதான வீதிக்கு அருகில் சுமார் 8 ஏக்கர் அளவில் பப்பாசி செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு தோட்டத்தினுள் உள்நுழைந்த யானைகள் அறுவடை பருவத்தில் காணப்பட்ட சுமார் 150 இற்கும் மேற்பட்ட பப்பாசி மரங்களைமுறித்து அழித்துள்ளது.

இதேவேளை அருகில் உள்ள காணிக்குள் புகுந்த யானைகள் ஒரு தொகை தென்னை மரங்களையும் அழித்துள்ளன. மேலும் யானை வேலி அமைக்கப்பட்டு இருந்தும் தமக்கு பிரியோசனம் இல்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.



இதேவேளை தற்போது வளர்ப்பு யானைகள் இந்தப் பகுதியில் வருவதால் இந்த அழிவுக்கு காரணம் எனவும், விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். எனவே, இதற்கான சரியான தீர்வை தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஈ. பி. டி. பி. கட்சி...

யாழ்ப்பாணம் இராணுவ பிடிக்குள் வரும்வரை சிறீதர் திரையரங்கு விடுதலை புலிகளால் பயன்படுத்தப்பட்டது. பின்னர், பின்னர் படையினரின் பாவனையில் இருந்த நிலையில், அதனை ஈ. பி. டி. பி. பெற்றுக் கொண்டதாக அந்தக் கட்சியினர் கூறுகின்றனர்.

போர் சூழ்நிலை காரணமாக பாதுகாப்பின் நிமித்தம் சுற்றிவர மின்சாரம் வழங்கப்பட்டு நாகவிகாரை உட்பட அயலில் உள்ளவர்களுக்கும் இங்கிருந்தே மின்சாரம் வழங்கப்பட்டது. போருக்கு பின்னர் மினசார பாவனை மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலும், மின்மானி வாசிப்பு அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்ட நிலையில், 2014 ஆண்டு புதிய மின்மானி பொருத்தப்பட்டது. அதன் பின்னர் மின் கட்டணம் சீராக செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும், 2014 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நிலுவை தொகை மற்றும் அதற்கான அபராதத் தொகை போன்றவையே தற்போது மின் துண்டிக்கப்பட்டமைக்கு காரணம் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 15 ஆண்டுகளாக சிறீதர் தியேட்டர் ஈ. பி. டி. பி. கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமிர்தலிங்கத்...

வயதில் நேற்று காலமானார்.

புலம்பெயர்ந்து லண்டனில் வசித்து வந்த நிலையில் அவர் நேற்று அங்கு காலமானார்.

ஆயுதப் போராட்ட தோற்றம் பெற்ற காலத்தில் காண்டீபனும் சில முன்னகர்வுகளை மேற்கொண்டிருந்தார். பின்னர், அதிலிருந்து விலகி பிரிட்டனுக்கு புலம்பெயர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வரவு - செலவுத்...

ஆகிய துறைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளதுடன், சமூக சந்தைப் பொருளாதாரத்தின் ஊடாக வரவு - செலவுத் திட்ட இலக்குகளை அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

"இந்த வரவு - செலவுத் திட்டம் சமூக நலன்கள் மிகவும் தேவைப்படும் மக்களுக்கு வழங்குவதில் அதிக கவனம் செலுத்துகிறது. நாட்டின் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தனியார் துறையை கட்டியெழுப்புவதற்கான கொள்கை சூழலை உருவாக்குகிறது. 2023 வரவு - செலவு திட்டத்தின் மூலம், புதிய உலகுக்கு ஏற்றவாறு புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயல்முறையானது இளைஞர்களுக்கு ஒரு கண்ணியமான நாட்டை உறுதி செய்வதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

இதேவேளை, வரவு - செலவு திட்டத்தின் மூன்றாவது மதிப்பீட்டுமீதான வாக்கெடுப்பு எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாம் இலங்கைக்கு போகமாட்டோம்! கப்பல் விபத்தில் சிக்கியோர் தெரிவிப்பு

ஹோசிமின், நவ. 14

**வியட்நாம் மற்றும் சிங்கப்பூருக்கு அருகில் உள்ள கடலில் விபத்தில் சிக்கி தற்போது வியட்நாமில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு வர விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளனர். தங்கள் பிரச்னையை தீர்க்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என அவர்கள் பிபிசியிடம் தெரிவித்துள்ளனர்.**

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற மியன்மார் கொடியுடனான லேடி ஆர்3 என்ற கப்பல் கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் கடற்பரப்பில் விபத்துக்குள்ளானது

வியட்நாமில் இருந்து 258 கடல் மைல் தொலைவில் கப்பல் சென்று கொண்டிருந்த போது இயந்திர கோளாறு ஏற்பட்டதாக வியட்நாமிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பின்னர் விபத்துக்குள்ளான கப்பலுக்கு அண்மையில் பயணித்த ஜப்பானிய சரக்குக் கப்பலான ஹீலியோஸ் லீடரால் அக்கப்பலில் பயணித்தவர்கள் மீட்கப்பட்டனர்.

பின்னர், வியட்நாமில் உள்ள வங் டாவு துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு, வியட்நாம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது வியட்நாமில் உள்ள அகதிகள் முகாமில் உள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் 264 ஆண்கள், 19 பெண்கள் மற்றும் 20 குழந்தைகள் உள்ளனதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் பயணித்த பெண் ஒருவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். "நாங்கள் வியட்நாம் அகதி முகாமில் இருக்கின்றோம். இலங்கையில் இருந்து வந்து நடுக்கடலில் தத்தளித்து கொண்டு இருந்தோம். எங்களை அழைத்து வந்தவன் எம்மை விட்டுவிட்டு தப்பிச் சென்று விட்டான். நாங்கள் சர்வதேச கடலில் தத்தளித்த போது ஜப்பான் நாட்டு கப்பல் வந்து எங்களை காப்பாற்றியது. அவர்கள் எம்மை ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்க இருந்தபோது, வியட்நாம் கடற்படை எம்மை அழைத்து வந்துள்ளது.

எங்களை எப்படியாவது காப்பாற்றவும். எமக்கு இலங்கை வேண்டாம். இலங்கையில் இருக்க முடியாது என்று காரணத்தால்தான் நாங்கள் வந்தோம். இலங்கைக்கு எமது ஆண் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போகவே முடியாது. அனைத்து நாடுகளும் இணைந்து எம்மை காப்பாற்றவும் - என்று கூறியுள்ளார். (ஐ)



## பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்தை நெரித்த உயர் அதிகாரி!

கொழும்பு, நவ. 14

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கழுத்தை பொது இடத்தில் அவரின் உயர் அதிகாரி ஒருவர் நெரிக்கும் காட்சிகள் சமூகவலைத்தளங்களில் பரவி வருகின்றன.

இது பல விமர்சனங்களை எழுப்பியுள்ளதுடன் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது. அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட இருவரை விடுதலை செய்யுமாறு கோரி இரு பெண்கள் நேற்று முன்தினம் களுத்துறையில் இருந்து கொழும்பு வரை நடைப்பயணம் மேற்கொண்ட நிலையில் அதற்கு பொலிஸார் தொடர்ச்சியாக இடையூறு விளைவித்தனர்.

இதன்போது குறித்த பெண்களை கைது செய்யும் வேளையில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் அடாவடியாக நடந்து கொள்ளும் வீடியோ சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. (ஐ)

## உணவு பாதுகாப்பு ஆலோசகராக சரத்

கொழும்பு, நவ. 14

உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னாள் அமைச்சரான சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரவை அமைச்சரான சரத் வீரசேகரவிடம் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர், ஜனாதிபதி அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பு அலுவலகத்தில் இருந்து பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மாணவர்களின் வருகை 80 சதவீதமாக வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 14

மாணவர்களின் பாடசாலை வருகை 95 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல பகுதிகளில் உள்ள சுமார் 400 ஆசிரியர்கள் மற்றும் 300இற்கும் மேற்பட்ட சிறுவர்களிடமிருந்தும் கல்வி அமைச்சிடம் இருந்தும் பெறப்பட்ட தரவுகளுக்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில மாகாணங்களில் வாரநாட்களில் திங்கட்கிழமையுடன் ஒப்பிடுகையில் வெள்ளிக்கிழமை மாணவர்களின் வருகை வெகுவாக வீழ்ச்சியை பதிவு செய்கிறது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் திங்கட்கிழமை 81 சதவீதமாக பதிவாகும் மாணவர் வருகை, வெள்ளிக்கிழமை 76 சதவீதமாக குறைவடைகிறது.

தென் மாகாணத்தில் திங்கட்கிழமை 86 சதவீதமாக பதிவாகும் மாணவர் வருகை, வெள்ளிக்கிழமை 79 சதவீதமாக வீழ்ச்சியடைகிறது. இவ்வாறு 10 முதல் 15 சதவீதமாக மாணவர்களின் வருகை குறைவடைதல் அல்லது கற்றல் செயல்பாடுகளை கைவிடுதல் போன்ற நடவடிக்கைகள் மிகவும் மோசமான நிலைமையாகும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். (ஐ)

## அதிகாரத்திலிருப்போர் அலட்சியம் அடாவடி நடவடிக்கையில் பொலிஸார்!

**சட்டத்தரணிகள் சங்கம் சீற்றம்**

கொழும்பு, நவ. 14

அதிகாரத்தில் உள்ளவர்களின் அலட்சியம் காரணமாக பொலிஸாரின் அடாவடிகள் தொடர்கின்றன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்வை வருமவாறு,

இன்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற மூன்று சம்பவங்கள் இலங்கை பொலிஸார் எவ்வளவு தூரம் தரம்தாழ்ந்துவிட்டனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

முதலாவது சம்பவம் கையில் பதாகைகளுடன் நடந்துகொண்டிருந்த பெண்களை பொலிஸார் துன்புறுத்தியது.

இரண்டாவது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெண்பொலிஸார் ஒருவரின் கழுத்தின் மீது கையை வைத்து அழுத்துவது.

மூன்றாவதாக சிரேஷ்ட சட்டத்தரணியொருவர் என்னை அழைத்து தனது உதவியாளரை அடையாள அட்டை வைத்திருக்கவில்லை என தெரிவித்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என தெரிவித்தார். அவரை பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

பொலிஸாரை கையாளும் அதிகாரம் படைத்தவர்கள் அதிகாரத்தில் உள்ளவாகளின் தோல்வி மெத்தனப்போக்கால் பொலிஸாரின் ஈவிரக்கமற்ற தன்மைகள் தொடர்கின்றன - என்றார். (ஐ)




## எஸ். ரி. எவ்வின் சுற்றிவளைப்பில் போதைப்பொருளுடன் ஐவர் கைது!

கொழும்பு, நவ. 14

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட போதைப் பொருள் தொடர்பான சுற்றிவளைப்பில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மூன்று மதுபான சுற்றிவளைப்புகளில் மட்டும் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 192 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டது. அத்துடன், 1,260 லீற்றர் கோடா, ஐந்து செப்புத் தகடுகள், 8 இரும்பு பீப்பாய்கள், 63,350 ரூபாய் பணம் என்பவற்றையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

இதேவேளை, கம்பஹா - ராகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டுவத்த பிரதேசத்தில் 7 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், டிஜிற்றல் தராசு என்பவற்றுடன் 41 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ராகமை பிரதேசத்தை சேர்ந்த 41 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது குறித்த நபரிடமிருந்து 51,900 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 25 கிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

படோவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 31 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.